வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 11 பக்கங்கள் : 16

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப ரூ. 50,000 கோடி ஒதுக்கீடு!




## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11

அனர்த்தத்திற்கு முகங்கொடுத்த மக்களின் வாழ்க்கையை முன்னெப்போதையும் விட சிறந்த நிலைக்கு மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கத்திற்கு திறன் இருப்பதாகவும், அதற்காக இந்த ஆண்டு ரூ. 50,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின் ரிதீகம, மாவதகம, மல்லவபிட்டிய, இப்பாகமுவ மற்றும் கணேவத்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்பட்ட அனர்த்தத்தால் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை ரிதீகம, தொடம்கஸ்லந்த இளைஞர் படையணி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்

அனர்த்தத்திற்குப் பிறகு நாடும் மக்களும் மிக விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாது என்று சிலர் கூறினாலும், தற்போது சேதமடைந்த அனைத்து வீதிகளையும் பொதுமக்களுக்கு மீண்டும் திறந்து, 15

# ஒரே தேசிய கட்டமைப்பின் கீழ் முன்பள்ளி கல்வி நடவடிக்கைகள்!

கொழும்பு, ஜன. 11

முன்பள்ளி கல்வியை ஒரே தேசிய கட்டமைப்பின் கீழ் கொண்டு வரவும், ஒருங்கிணைந்த பாடத்திட்டத்துடன் ஒத்திசைக்கவும், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகளை முறையான வகையில் நடத்தவும் மற்றும் தரநிலைகளை உறுதி செய்யவும் அரசாங்கம் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய, தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற குழந்தை ஆரோக்கிய மேம்பாட்டுக்கான தேசிய 15



# வடக்கில் இன்று வரை கனமழை!

யாழ்ப்பாணம், ஜன. 11

வங்காள விரிகுடாவில் காணப்பட்ட ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் தற்போது நன்கமைந்த காற்றமுத்த தாழ்வு நிலையாக வடக்கு மாகாணத்தின் மையத்தில் உள்ளது. இதனால் கரையோர கடல் கொந்தளிப்புடன் காணப்படும். ஆகையால் மறு அறிவித்தல் வரை மீனவர்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே 15

# 22 நாடுகளிடம் இருந்து இலங்கைக்கு ரூ.1.57 பில்லியன் மதிப்பிலான உதவி

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 11

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, 22 வெளிநாடுகளும் உலக உணவுத் திட்டமும் இணை ந்து ரூ.1.57 பில்லியன் மதிப்பிலான மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த உதவிகளில் பொருள் உதவிகளும் மனிதவள ஆதரவும் அடங்குகின்றன. அனைத்து நிவாரணப் பொருட்களும் தற்போது ஒரு கொடவத்தை களஞ்சிய 15

# தீவிரமடைகிறது டெங்கு!

கொழும்பு, ஜன. 11

இலங்கையில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் கபில 15

# 100 அடி உயரத்திலிருந்து தவறி விழுந்த வெளிநாட்டு குழந்தை!

## அதிரடியாக மீட்ட மீட்புக் குழுவினர்

கொழும்பு, ஜன. 11

எல்லவில் அமைந்துள்ள பிரபலமான சுற்றுலாத் தளமான லிட்டில் அடம்ஸ் சிகரம் பகுதியில், செங்குத்தான பாறையிலிருந்து விழுந்த 15



# நான்கில் ஒரு பகுதியினர் நாட்டில் வறுமைநிலையில்!

கொழும்பு, ஜன. 11


நாட்டின் சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக வறுமைப் பகுப்பாய்வு நிலையம் நடத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதனை ஓ.டி.ஐ. குளோபல் நிறுவனத்தின் சிரேஷ்ட உறுப்பினர் கணேசன் விக்னராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் 15

# அரியாலையில் மோ.சைக்கிளை மோதித்தள்ளியது கடுகதி ரயில்!

## இளைஞர் ஒருவர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணம் - அரியாலை 13ஆம் கட்டைப் பகுதியில் நேற்று விபத்து சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 15

# சுற்றுலாப் பயணிகள் அதிகரித்தாலும் வருமானத்தில் தொடர்ந்து மந்தநிலை!

கொழும்பு, ஜன. 11

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த 2025 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ள போதிலும், ஒரு சுற்றுலாப் பயணி இலங்கையில் செலவிடும் சராசரித் தொகை வீழ்ச்சியடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அண்மைக் கால புள்ளிவிவரங்களில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை 15.1 15

# பேராற்றின் வான் கதவுகள் திறப்பு அவதானமாக இருக்க கோரிக்கை!



வவுனியா, ஜன. 11

வவுனியா, பேராறு அணையின் கீழ் பகுதியில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நேற்று 15

# டித்வா புயலால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்க சவூதி 6 மில்லியன் டொலர்!

கொழும்பு, ஜன. 11

டித்வா புயல் காரணமாக சேதமடைந்த வீதிகளைப் புதுப்பித்து சீரமைப்பதற்காக, சவூதி அரேபிய அபிவிருத்தி நிதியத்திடமிருந்து இலங்கைக்கு கூடுதலாக 6 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிதி உதவி, பாராளுமன்றத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சவூதி அபிவிருத்தி நிதியத்தின் மூத்த அதிகாரிகள் இடையே நடைபெற்ற கலந்துரையாடல்களுக்குப் பின்னர் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கல்வி மறுசீரமைப்பில் ஏற்பட்ட பிரச்னைக்கு பொறுப்பு கூறுவது யார்?

### நாமல் ராஜபக்ஷ கேள்வி



கொழும்பு, ஜன. 11

புதிய கல்வி மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு பொறுப்புக்கூறுவது யார்? கல்வி அமைச்சர் இந்த குழுவை அமைத்தார். அவ்வாறாயின் அவரே தவறின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். தவறுதலாக நடந்த விடயம் என்று கூறி கைகளை துடைத்துக்கொள்ள முடியாது. எமது கலாசாரத்துக்கும் நாட்டுக்கும் ஏற்றவாறு புதிய கல்வி மறுசீரமைப்பு அமைய வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கல்வி மறுசீரமைப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என்பதை போன்ற கருத்துக்களை அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கின்றது. அவ்வாறு இல்லை. நாங்கள் இந்த நாட்டுக்கு பொருத்தமான கல்வி மறுசீரமைப்பு ஏற்பட வேண்டும் என்பதுடன் நாட்டின் தொழில்சந்தையும் காலத்துக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

அரசாங்கத்துக்கோ, பிரதமருக்கோ ஏற்றவாறு கல்வி மறுசீரமைப்பை செய்ய முடியாது. நாட்டுக்கு பொருத்தமானவாறு அதனை செய்ய வேண்டும். அப்போது எவரும் எதிர்க்கப் போவதில்லை. ஆனால், மறுசீரமைப்புக்குள் பிள்ளைகளின் மனநிலையை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தால் அதற்கு நாங்கள் இடமளிக்கப் போவதில்லை"- என்றார். (எ)

## நீதித்துறை சுதந்திரம் பற்றிப்பேச நாமல் எம். பிக்கு உரிமையில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 11

நீதித்துறை சுதந்திரம் பற்றி நாமல் ராஜபக்ஷ பேசுகிறார். இவர்களது ஆட்சியில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவை எவ்வாறு பதவி நீக்கினார்கள் என்பதை முழு நாடும் அறியும். உண்மையில் இவர்கள் வெட்கப்பட வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு உள்ளாகியுள்ளவர்கள், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் தான் இன்று நீதிமன்றத்தை விமர்சிக்கிறார்கள். இலங்கை தமிழ் அரசுக் கட்சியோ அல்லது முஸ்லிம் காங்கிரஸோ நீதிமன்றத்தை விமர்சிப்பதில்லை என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் அதன் அதிகாரங்களை ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சியினர் முன்வைத்த யோசனைக்கு சபாநாயகர் சட்ட ஏற்பாடுகள், நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் பாராளுமன்ற மரபுகள் ஊடாக விரிவான விளக்கமளித்துள்ளார்.

நாட்டின் முத்துறைகளான சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகிய துறைகள் ஒன்றோடு ஒன்று இணக்கமாக செயல்பட வேண்டும். இருப்பினும், ஒரு துறைக்குள் இன்னொரு துறை தலையிட கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் வலுவேறாக்க கொள்கை முறையாக செயல்படுத்தப்படவில்லை. நிறைவேற்றுத்துறை ஏனைய துறைகளை ஆக்கிரமித்திருந்தது.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்துடன் முரண்பட்ட காரணத்துக்காக அப்போதைய பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க பாராளுமன்றத்தால் முறையற்ற வகையில் நீக்கப்பட்டார். இவ்வாறான பின்னணியில் தற்போது நீதிச்சேவை ஆணைக்குழு பற்றி ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்குமாறு எதிர்க்கட்சியினர் கோருகிறார்கள். இது முற்றிலும் தவறானது."- என்றார். (எ)

## பதவி உயர்வில் சிரேஷ்ட நீதிபதிகள் புறக்கணிப்பு

### அரச தரப்பு மீது தயாசிறி எம். பி. சாடல்

கொழும்பு, ஜன. 11

நீதிபதிகளுக்கான பதவி உயர்வின் போது சிரேஷ்ட நீதிபதிகள் புறக்கணிக்கப்பட்டார்கள். இந்த முறையற்ற செயல்பாட்டுக்கு நீதி கோரியே பாராளுமன்ற செயல்குழு ஒன்றை நியமிக்குமாறு கோரினோம். சிரேஷ்ட நீதிபதிகள் இவ்வாறு புறக்கணிக்கப்படும் போது கீழ் நிலை நீதிமன்ற நீதிபதிகள் அரசாங்கத்துக்கு விருப்பமான வகையில் தீர்ப்பளிக்க வேண்டும். அப்போது தான் பதவி உயர்வு கிடைக்கும் என்று கருதுவார்கள். 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நீதிமன்றங்களுக்கு தீ வைத்து, நீதிமன்ற ஆவணங்களை அழித்தவர்கள் இன்று நீதித்துறை சுதந்திரம், சுயாதீனம் பற்றி பேசுவது வேடிக்கையாகவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நீதிபதிகளின் நியமனம், பதவி உயர்வு மற்றும் பதவி நீக்கம் தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்குமாறு நாங்கள் விடுத்த யோசனை தொடர்பில் சபாநாயகரால் விடுக்கப்பட்ட அறிவிப்பு முற்றிலும் தவறானது.

நீதிபதிகளின் பதவி உயர்வு, இடமாற்றம் தொடர்பிலான முறைமையை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தின் ஊடாகவே நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. ஆணைக்குழு ஒவ்வொரு முறையும் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். ஆகவே, நீதிச்சேவை ஆணைக்குழு என்பது நீதிமன்றமல்ல, அது நிர்வாக கட்டமைப்பின் ஒரு பகுதி மாத்திரமே, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயல்பாடுகள் பற்றியே நாங்கள் கேள்வியெழுப்பினோம். சபாநாயகர் விடுத்த அறிவிப்பு தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடனோ அல்லது பாராளுமன்ற செயலாளர் அலுவலகத்தின் அதிகாரிகளிடமோ கலந்துரையாடினாரா? இல்லை என்றே குறிப்பிட வேண்டும்.

நீதித்துறையின் சுயாதீனத்துக்கு எதிராக நாங்கள் செயல்படவில்லை. பாதிக்கப்பட்டுள்ள நீதிபதிகளுக்கே நீதி கோரினோம்"- என்றார். (எ)

## ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையை மறந்துவிட்டார்களா?

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க கேள்வி

கொழும்பு, ஜன. 11

ஊடகங்கள் போலியான செய்திகளை வெளியிடும் போது அதனை தட்டிக்கேட்கும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டு. ஊடக சுதந்திரம் பற்றி நாமல் ராஜபக்ஷ பேசுவது வேடிக்கையாகவுள்ளது. 17 ஆண்டுகளுக்கு முன்னர் சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். சாட்சிகளும் அழிக்கப்பட்டன. சிரச தொலைக்காட்சி நிறுவனம் மீதும் தாக்குதல் நடத்தினார்கள். இவர்கள் தான் இன்று ஊடக சுதந்திரம் பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள் என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கம் ஊடக அடக்குமுறையில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். கடந்த காலங்களில் எதிர்க்கட்சி தலைவரின் அரசியல் கூட்டத்தில் உரையாற்றிய பௌத்த தேரர் ஒருவர் பாம்பு ஊடகமும் அனைத்துக்கும் உயர்வாக உள்ள ஊடகவும் எதிர்க்கட்சி தலைவருக்கு எதிராக போலியான செய்திகளை வெளியிடுவதாக குறிப்பிட்டார்.

இன்று அந்த இரண்டு ஊடகங்களும் அரசாங்கத்தின் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விமர்சனங்களை முன்வைக்கின்றன. இந்த விமர்சனங்களை நாங்கள் ஒரு சதத்துக்கேனும் மதிப்பிட போவதில்லை. ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

ஊடக சுதந்திரத்தில் இருந்து கொண்டு ஊடகங்கள் போலியான செய்திகளை வெளியிடும் போது அதனை தட்டிக்கேட்கும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டு. மக்களின் தகவலறியும் உரிமையை பாதுகாக்க வேண்டும்."- என்றார். (எ)

## காரைநகரில் மகேஸ்வரன் வீதி பெயர் பலகை திறந்து வைப்பு



யாழ்ப்பாணம், ஜன. 11

முன்னாள் அமைச்சர் தியா கராஜா மகேஸ்வரனின் பிறந்த நாளான நேற்று காரைநகரில் மகேஸ்வரன் பெயர் பொறிக்கப்பட்ட வீதி பலகை திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் க. பாலச்சந்திரனால் 2018ஆம் ஆண்டு காரைநகர் சின்னாலடி வீதியை முன்னாள் இந்து கலாசார அமைச்சரின் நினைவாக மகேஸ்வரன் வீதியாக மாற்றக்கோரி சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு தற்போதைய காரைநகர் பிரதேசசபை உறுப்பினர் த. செந்தூரனின் வேண்டுகோளுக்கிணங்க அமரர் மகேஸ்வரனின் பிறந்த நாளான நேற்றுக் காலை பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணன் கோவிந்தராஜ், உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், பொது மக்களின் பங்குபற்றுதலுடன் பெயர் பலகை திரைநீக்கம் செய்து திறந்து வைக்கப்பட் டது. (எ)

## 2 கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 11

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் கேரள கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் செம்பியன் பற்று வடக்கு பகுதியில் பயணித்த ஓட்டோ ஒன்று விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் மாலை சுற்றிவளைக்கப்பட்டது. ஓட்டோவை சோதனை செய்தபோது அதிலிருந்து 2 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து செம்பியன் பற்று வடக்கை சேர்ந்த 19 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ-08)

## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வேலணையில் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், ஜன. 11

வளமான நாடும் அழகான வாழ்க்கையும் என்னும் தொனிப் பொருளில் டெங்கு ஒழிப்பு மூன்று நாள் தேசிய வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி மண்டைதீவு ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை பிறப்பு வீதத்தை அதிகரிக்க ஊக்கத் தொகை வழங்க வேண்டும்

**அஜித் பி பெரேரா தனிநபர் பிரேரணை முன்வைப்பு**

கொழும்பு, ஜன. 11

நாட்டில் அண்மைக்காலமாக பிறப்பு வீதம் குறைவடைந்துள்ள நிலையில் குழந்தை பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்காக குடும்பங்களுக்கு ஊக்குவிப்பு தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளார்.

குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்பங்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல் என்ற தலைப்பில் அஜித் பி. பெரேராவால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வருடாந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால், எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர் சனத்தொகை நிச்சயமாக வீழ்ச்சியடையக் கூடிய வாய்ப்புள்ளது. இளைஞர் சனத்தொகை இவ்வாறு வீழ்ச்சியடையும்போது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பாதகமான தாக்கங்கள் ஏற்படக் கூடும்.

இதனால், இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்ப அலகுகளை கவரக்கூடிய ஊக்குவிப்புத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- இவ்வாறு அந்த பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# "அனுமதியின்றி நாட்டப்பட்ட பெயர் பலகைகளே அகற்றம்"

யாழ்ப்பாணம், ஜன. 11

கந்தரோடை விகாரை, கதுருகொட விகாரை என பிரதேச சபையின் அனுமதியின்றி நாட்டப்பட்ட பெயர் பலகைகளே அகற்றப்பட்டன என்று வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி. பிரகாஸ் தெரிவித்தார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்த பெயர் பலகைகள் அகற்றப்பட்டன என்று தவிசாளர் கூறினார்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் சந்தைக்கு அருகில் மற்றும் வேறு இரண்டு இடங்களில் "கந்தரோடை விகாரை" என திசை காட்டும் பெயர் பலகை நாட்டப்பட்டிருந்தது.

அத்தோடு சுன்னாகம் சந்தைக்கு அருகில் "கந்தரோடை விகாரை" என பெயர் பலகை நாட்டப்பட்டிருந்த இடத்தில் தற்போது, சுன்னாகம் சந்தைக் கட்டடம் ஒல்லாந்தர் காலத்துக்கு உரியதாகும் எனவும் அதன் சிறப்புகள் தொடர்பில் மும்மொழிகளிலும் எழுதிய கல்வெட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.(எ)

### கல்வி அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு கையொப்பம் திரட்டல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 11

கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான பொதுமக்களின் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான மக்கள் எதிர்ப்பை இதன் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# எனது அரசியல் பயணம் தடையின்றி தொடரும்

**பிணையில் வந்த டக்ளஸ் தேவானந்தா**

யாழ்ப்பாணம், ஜன. 11

என்னை திடீரென கைது செய்ததன் காரணமாக எனது மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் கவலையையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது - இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்தோடு, தனது அரசியல் பயணம் தடையின்றித் தொடரும் என்றும் அவர் கூறினார்.

காணொலி ஒன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"நான் விடுவிக்கப்பட்டிருக்கின்றேன். அந்த வகையில் எனது விடுதலையையிட்டு மகிழ்ச்சியடைந்த மக்கள், பல்வேறு வழிகளிலும் தமது உணர்வுகளை எனக்கு வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு பல காரணங்களுக்காக எனது நன்றியை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, எனது தரப்பு நியாயங்களை நீதிமன்றில் எடுத்துரைத்த சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸுக்கும் அவரது குழுவினருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். அத்துடன், நியாயங்களை உணர்ந்து தீர்ப்பளித்த கம்பஹா மாவட்ட நீதிவானுக்கும் எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன்"- என்றார்.

2001ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தினரால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று 2019ஆம் ஆண்டு பாதாள குழு உறுப்பினரான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட விசாரணைக்கு அமைய டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அவரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.(எ-03)

# கிரிக்கெட் போட்டியை காணவந்த இளைஞர் குழு விபத்தில் சிக்கியது

கொழும்பு, ஜன. 11

நேற்று அதிகாலை ஏ- 9 வீதியின் மிஹிந்தலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

தம்புள்ளை மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியொன்றை பார்வையிடுவதற்காக வந்து, மீண்டும் வான் ஒன்றில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இளைஞர் குழுவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மிஹிந்தலை பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ)

# யாழில் 20 போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் வைத்து 20 போதை மாத்திரைகளுடன் 26 மற்றும் 28 வயதுடைய சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதை தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-05)

# கிரகரி வாவியில் விழுந்த விமானம் 2 நாள் போராட்டத்தின் பின் மீட்பு

நுவரெலியா, ஜன. 11


நுவரெலியா, கிரகரி வாவியில் விழுந்து விபத்துக்குள்ளான விமானம் பல்வேறு சிரமத்துக்கு மத்தியில் இரண்டாவது நாளான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மீட்டெடுக்கப்பட்டது.

விமானப்படைக்கு சொந்தமான அதி உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பாரந்தூக்கி வாகனங்கள் மூலம் இந்த விமானம் கரைக்கு இழுத்து தூக்கி எடுக்கப்பட்டது.

எனினும், மீட்புப் பணியின் போதும் விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்திலும் குறித்த விமானத்துக்கு கடுமையாக சேதம் ஏற்பட்டுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து ஆணைய அதிகாரிகள் மேற்கொண்ட பரிசோதனையின் பின்னர் நுவரெலியா பொலிஸ் உயிர்காப்பாளர்கள், விமானப்படை அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் கிரகரி வாவி படகு சவாரி வீரர்கள் ஆகியோர் இணைந்து வாவியில் விபத்துக்குள்ளான விமானத்தை பல்வேறு சிரமத்துக்கு மத்தியில் மீட்டனர்.

(எ)




# மலையக மக்களுக்கு வீடுகளை அமைத்து கொடுக்க வேண்டும்

**மனோ கணேசன் எம். பி. வலியுறுத்தல்**

கொழும்பு, ஜன. 11

கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடிப்பது போன்று, இந்திய வீடமைப்பு திட்டத்தை பெற்றுக் கொண்டு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க அரசாங்கம் முற்படக்கூடாது. பாதிக்கப்பட்ட ஏனைய மக்களுக்கு வழங்குவதாக தெரிவித்த நிவாரணங்களை எமது மக்களுக்கும் அரசாங்கம் வழங்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மத்தியஸ்த சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மீள கட்டியெழுப்பும் இலங்கை என்ற வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளார். அதனை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இந்த வேலைத்திட்டத்தில் மலையக மக்களுக்கான வீடு மற்றும் காணி உரிமை எங்கே என கேட்கிறோம். அதேபோன்று, அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண தொகையாக 25ஆயிரம் முதல் 50 இலட்சம் வரை பாதிப்புக்கு ஏற்றவகையில் வழங்குவதாக ஜனாதிபதி சபையில் அறிவித்தார். அதிலும், மலையக மக்களுக்கு பாரபட்சமாக மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்தான் அரசாங்கம் நடத்தி கொண்டிருக்கிறது. ஆனால், இதனைவிட முக்கியமானது வீடு மற்றும் காணி உரிமை.

இடம்பெற்ற அனர்த்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது மலையக பிரதேச பெருந்தோட்ட மக்களே. இவர்களில் 10ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாடசாலைகளிலும் அவர்களின் உறவினர்களின் வீடுகளிலும் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். ஆனால், அந்த மக்கள் இன்று செய்வதறியாது இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட ஏனைய மக்களுக்கு பல்வேறு நிவாரண தொகைகளை ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். ஆனால், இந்த மக்களுக்கு ஒன்றும் இல்லை. அதனால் இதுதொடர்பில் அரசாங்கம் சரியான முறையில் தெளிவுபடுத்தி தெரிவிக்கவேண்டும்."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருகோணமலை மாவட்டத்துக்கு சிவப்பு எச்சரிக்கை வெளியீடு!

# மூதூர் கரையோர பகுதிகள் பாதிப்பு மீனவர்களுக்கு கடலுக்கு செல்ல தடை



திருகோணமலை, ஜன. 11

நாட்டில் தற்போது நிலவுகின்ற தாழமுக்கம் காரணமாக திருகோணமலை மாவட்டத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாழமுக்கம் காரணமாக மூதூர் பிரதேசத்தின் கரையோர பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கடல் அலை தாக்கம் காரணமாக கரையோரங்களில் அமைந்திருந்த மீன்வாடிகள் மற்றும் கருவாடு உலர்த்த பயன்படுத்தப்பட்ட தட்டிகள் கடல் நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளன.

மேலும், கடல் அரிப்பு காரணமாக கரையோரத்தில் இருந்த மரங்கள் வேருடன் சாய்ந்து கடலுக்குள் விழுந்தன.

இந்த நிலைமையை கருத்தில் கொண்டு, மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, மீனவர்கள் தங்களது படகுகளை பாதுகாப்பான இடங்களுக்கு உயர்த்தி வைத்துள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் இதே போன்று இடம்பெற்று வருவதால் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு கற்களை நிரப்பி தடுப்பு வேலி அமைப்பதன் மூலம் இந்த கடல் அரிப்பால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்க முடியும் என்று பொது மக்கள் தெரிவித்தனர். (எ)

### கூச்சலிடுவது மாத்திரம் பணியல்ல

# அர்ச்சுனா எம். பி. மீது அரச தரப்பு பாய்ச்சல்

கொழும்பு, ஜன. 11

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா காலையில் இருந்து சபையில் கூச்சலிட்டுக் கொண்டு ஏனைய உறுப்பினர்களுக்கு இடையூறாக செயல்படுகிறார். பாராளுமன்றத்தில் கூச்சலிடுவதும் சிற்றுண்டிச் சாலையில் சென்று சாப்பிடுவது மாத்திரம் பணியல்ல என்பதை அவர் விளங்கிக்கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் எவ்வாறு செயல்படுவது என்பது தொடர்பில் வடக்கு மாகாணத்தின் ஏனைய உறுப்பினர்களிடமிருந்து அர்ச்சுனா எம். பி. கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஊடகத்துறை பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் திட்டமிட்ட வகையில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் ஒரு தரப்பினர் குறிப்பாக அரசியல் தரப்பினர் பிரதமர் மீது மிக மோசமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார மிகவும் கீழ்த்தரமான வகையில் பிரதமர் மீது விமர்சனங்களை முன்வைத்தார். சைகை மற்றும் வார்த்தை பிரயோகத்தால் பிரதமரை விமர்சித்தார். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஆகியோர் இந்த கீழ்த்தரமான செயல்பாட்டை ஏற்றுக்கொள்வார்களா?

அதேபோன்று எதிர்க்கட்சியின் பெண் உறுப்பினர்களான ரோஹிணி கவிரத்ன, சந்திராணி கிரியெல்ல ஆகியோர் இந்த கீழ்த்தரமான செயல்பாட்டை ஏற்றுக்கொள்வார்களா?, பிரதமர் மீதான குற்றச்சாட்டுக்கள் மிகவும் கீழ்த்தரமானது.

பாராளுமன்ற நிலையியல் கட்டளை புத்தகம் மாத்திரம் பாராளுமன்றத்தின் முழு நடவடிக்கையல்ல. பாராளுமன்றத்தில் கூச்சலிடுவதும் சிற்றுண்டிச் சாலையில் சென்று சாப்பிடுவது மாத்திரம் பணியல்ல என்பதை அர்ச்சுனா எம். பி. விளங்கிக் கொள்ள வேண்டும்"- என்றார். (எ)

# எதிர்க்கட்சி கோரிக்கையை நிராகரித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜன. 11

நீதித்துறை அதிகாரிகளின் நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் குறித்து விசாரணை செய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சி விடுத்த கோரிக்கையை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நிராகரித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமது தீர்மானத்தை அறிவித்த சபாநாயகர், நீதித்துறையின் விவகாரங்களில் தலையிடுவதற்கு சட்டவாக்கத்துக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டார்.

அத்தகைய குழுவொன்றை நிறுவுவது, அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசமைப்பு கொள்கையை மீறுவதாக அமையும் என்றும் அவர் கூறினார். (எ)

# கொண்ட ரஞ்சி டுபாயில் கைது

கொழும்பு, ஜன. 11

பாதாள உலகக் குழு உறுப்பினரான கொண்ட ரஞ்சி என்ற ரஞ்சித் குமார இத்தாலிக்கு தப்பிச் செல்ல முயன்றபோது டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நாட்டு பாதுகாப்பு பிரிவினரால் குறித்த சந்தேகநபர் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் பின்னர் மனைவியும் பிள்ளைகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் ஒருங்கிணைப்பு செயலாளரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவரே இந்த கொண்ட ரஞ்சி என்ற ரஞ்சித் குமார எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் தற்போது டுபாய் பொலிஸ் தலைமையகத் தில் தடுத்து வைக்கப்பட்டுள் ளார்.

இதேவேளை, கொண்ட ரஞ்சி ஐக்கிய அரபு இராஜ்ஜியத் தில் கோல்டன் விசா எனப்படும் 10 வருடங்களுக்கான வதிவிட விசா உரிமையாளர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# முகத்துவாரம் வெட்டப்பட்டது

மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி முகத்துவாரம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் வெட்டப்பட்டுள்ளது.

அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைகளுக்கமைய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் மே. வினோராஜ் முன்னின்று இந்த முகத்துவாரத்தை வெட்டியுள்ளார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் முகத்துவாரம் வெட்டப்பட்டு, நீர்வடிந்தோடச் செய்யப்பட்டன.

இந்த முகத்துவாரம் வெட்டப்பட்டதன் மூலம் களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சிமடம், களுதாவளை, போன்ற பல கிராமங்களில் கரையோரப்பகுதிகளில் தேங்கியிருக்கும் வெள்ளம் இதனூடாக வழிந்தோடுவதாக தவிசாளர் தெரிவித்தார். (எ)



# காலி நீதிமன்றம் அருகில் தீ பரவல்

காலி, ஜன. 11

காலி நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்கு அருகிலுள்ள குப்பை மேடு ஒன்றில் நேற்று முன்தினம் மாலை தீ பரவியுள்ளது.

பொலிஸாரும் காலி மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும் இணைந்து தீயை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண் டுவந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# பல போதைப்பொருட்களுடன் ஜீப்பில் பயணித்தவர் கைது!

### 1000 போதை மாத்திரைகள் மீட்பு

கொழும்பு, ஜன. 11

பெரியமுல்ல, ஏத்துக்கால ரயில் கடவைக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான ஜீப் வாகனம் ஒன்றை சோதனையிட்ட போது அதில் பயணித்த நபர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை குற்றத்தடுப்பு பணியில் ஈடுபட்டிருந்த நீர்கொழும்பு பிராந்திய குற்றத் தடுப்பு பணியகத்தின் குழுவொன்றால் இந்த ஜீப் வாகனம் சோதனையிடப்பட்டது.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் கஞ்சா, ஒரு கிராம் கொக்கைன் மற்றும் 100 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேகநபர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, அவர் தங்கியிருந்த விடுதி அறையிலிருந்து 29 கிராம் 240 மில்லி கிராம் குஷ் போதைப்பொருளும் 02 கிராம் 230 மில்லி கிராம் அடையாளம் காணப்படாத போதைப்பொருளும் கண்டெடுக்கப்பட்டன.

பின்னர், சந்தேகநபருக்கு சொந்தமான மருந்தகம் ஒன்றை சோதனையிட்ட போது அங்கிருந்து 1000 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பிராந்திய குற்றத் தடுப்பு பணியகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. (எ)

# மட்டக்களப்பில் அம்புலன்ஸ் விபத்து; இரண்டு பேர் வைத்தியசாலையில்!

மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான நோயாளர் காவு வண்டி மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நோயாளர் காவு வண்டி மின் கம்பத்தில் மோதியதில் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இருவரும் சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து நிந்தவூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த நிந்தவூர் ஆதார மருத்துவமனைக்கு சொந்தமான நோயாளர் காவு வண்டியே பாதையை விட்டு விலகி அருகில் இருந்த பாரியளவிலான மின்கம்பத்தில் மோதியுள்ளது.



இந்த விபத்தில் நோயாளர் காவு வண்டி முற்றாக சேதமடைந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
11.01.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சிறுபான்மைகளின் பாதுகாப்பு?

சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு கூட்டு அர்ப்பணிப்பு அவசியம் - இதற்கு பிராந்திய ஒத்துழைப்பு அவசியம் - வலுவானதொரு பிராந்திய ஒத்துழைப்புக்கு இந்தியா தலைமையேற்க வேண்டும். இவ்வாறு நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். நாமல் இவ்வாறு கூறுவது இரண்டு நிலைகளில் முரண்பாடானது. ஒன்று, இலங்கையின் இனச் சிறுபான்மையான ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் ஏற்பாடுகள் இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருக்கின்றபோது, அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தியிருக்கலாம் ஆனால் பதின்மூன்று பிளஸ் என்று கூறிக்கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ ஆக்கபூர்வமாக எந்தவொரு விடயத்தையும் முன்னெடுத்திருக்கவில்லை. அடுத்தது, மகிந்த ராஜபக்ஷ காலத்தில் சீன சார்பு நிலையே மகிந்தவின் வெளிவிவகார அணுகுமுறையாக இருந்தது.

ஆனால் இப்போது பிராந்தியத்தில் இந்தியா தலைமையேற்க வேண்டும் என்று நாமல் கூறுகின்றார். அரசியலில் மாற்றங்கள் தவிர்க்க முடியாததுதான். ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்பை பிரதான அரசியலாக கைக் கொண்டிருந்த ஜே.வி.பி தற்போது பெரியளவில் மாற்றங்களை காண்பிக்கின்றது. அதே போன்று நாமல் ராஜபக்ஷவின் சிந்தனைப் போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் இங்கு கவனத்தில்கொள்ளவேண்டிய விடயம் வேறு. அதாவது, அண்மையில் பங்களாதேஷில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்திருக்கின்றன. முதலில் இந்துக்கள் தாக்கப்பட்டனர். பின்னர் பௌத்தர்களின் புனித மரம் மற்றும் வழிபாட்டு இடங்கள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறானதொரு பன்புலத்தில்தான் நாமல் இந்தியாவின் பிராந்திய தலைமைத்துவம் பற்றி பேசுகின்றார். எங்கு அடிப்படைவாத சக்திகள் வீதிக்கு வருகின்றார்களோ அங்கெல்லாம் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பற்ற சூழலே ஏற்படும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், எண்ணிக்கையில் சிறுபான்மையான ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான சட்ட ஏற்பாடுகளை உறுதிப்படுத்துவதில் எந்தவொரு ஆட்சியாளரும் இதுவரையில் முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. 2009 இல் யுத்தத்தை வெற்றிவாதத்தை அரசியல் முதலீடாக்கிக் கொண்ட மகிந்த ராஜபக்ஷவினால் பிரச்னைகளுக்கான தீர்வை காணும் நோக்கில் செற்பட்டிருக்லாம். ஆனால் மகிந்தவோ தனது அதிகார மோகத்திற்கே முன்னுரிமையளித்தார். யுத்த வெற்றிவாதம் எல்லாக் காலத்திலும் பயன்படும் என்னுமடிப்படையிலேயே செயற்பட்டார்.

ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு என்பது அவர்கள் மீதான பரிவுணர்விலிருந்து வருவதில்லை - மாறாக அவர்களை சமமாக நடத்துவதற்கான கொள்கை நிலைப்பாட்டிலிருந்து வர வேண்டும். பாகிஸ்தானில் சிறுபான்மை இந்து மக்களுக்கு பாதுகாப்பில்லை - தற்போது பங்களாதேஷிலும் அவ்வாறான நிலையே ஏற்பட்டிருக்கின்றது. காரணம் மதவெறுப்பு அடிப்படைவாத சக்திகள் பலமடைந்துவருகின்றன. நாமல் கூறுவது போன்று இந்த விடயத்தில் இந்தியா பிராந்திய தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்பது சரி. ஆனால் இலங்கையில் ஏற்கனவே இந்தியாவின் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பிற்காக கொண்டுவரப்பட்ட தீர்வை முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலை இருப்பதை எவ்வாறு மாற்றியமைப்பது? இலங்கையின் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு தொடர்பில் தென்னிலங்கை அரசியல் தரப்புக்கள் அக்கறை கொள்வது உண்மையாயின் முதலில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் வழியாக கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளை முழுமையாக அமுல்படுத்துவதில் கரிசனை கொள்ள வேண்டும்.

# பெண் என்பதால் பிரதமருக்கு எதிராக கீழ்த்தரமான சேறுபூசல் நடவடிக்கை!

### சாணக்கியன் எம்.பி. கண்டனம்

கொழும்பு, ஜன. 11

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக அவரின் தனிப்பட்ட விடயங்களை வைத்து முன்னெடுக்கப்படும் கீழ்த்தரமான சேறுபூசல் நடவடிக்கைகளை இலங்கை தமிழரசு கட்சி வன்மையாக கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் தெரிவித்தார்.

அத்துடன் பிரதமர் மீதான தாக்குதல் செயற்பாடுகளில் எதிர்க்கட்சி மாத்திரமன்றி அரசாங்கத்திற்குள்ளிருந்தும் சிலர் செயற்படுவது போல் சந்தேகம் எழுகிறது என்றும் அவ்வாறானவர்கள் தொடர்பில் பிரதமர் கவனமாக செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கடைகள், அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய சாணக்கியன் எம்.பி,

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பெரும் விமர்சனங்கள் உள்ளன. எம்மிடையே அது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன.

குறிப்பாக வரலாறு தொடர்பான சில உள்ளடக்கங்கள் தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. அந்த வகையில் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை சந்தித்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

இந்நிலையில் பிரதமருக்கு எதிராகவும் பெண்ணென்ற வகையில் அவருக்கு எதிராகவும் முன்னெடுக்கப்படும் கீழ்த்தரமான சேறுபூசல் நடவடிக்கைகளை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம்-என்றார். (அ)

## மன்னார் பொது வைத்தியசாலையில் நரம்பியல் சத்திர சிகிச்சை கிளினிக்

மன்னார், ஜன. 11

மன்னார் மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மாவட்ட பொது வைத்தியசாலையில் நரம்பியல் சத்திர சிகிச்சை விசேட கிளினிக் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நரம்பியல் சத்திர சிகிச்சை மற்றும் அதனுடன் தொடர்புடைய நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலைக்கு பயணம் செய்யவேண்டிய நிலையில் இருந்தனர்.

இதனால் அவர்கள் பெரும் பிரயாண மற்றும் பொருளாதார சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர். இந்த நிலைக்கு தீர்வாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எம்.எச்.எம்.ஆஸாத்தின் வேண்டுகோளுக் கிணங்க, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப் பாளரின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் விசேட நரம்பியல் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரின் சேவையில், மன்னாரில் இந்த கிளினிக் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்த விசேட கிளினிக்கை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் நரம்பியல் சத்திர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் எம்.பிரியதர்ஷன், சத்திர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் எஸ்.தர்ஷன், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு மாதமும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இந்த விசேட கிளினிக் சேவையை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு, வைத்தியசாலை பணிப்பாளர் மக்களிடம் கேட்டுக்கொண்டார். (அ)

## வட்டுவாகல் பாலம் ஊடாக சுமுகமான போக்குவரத்து

முல்லைத்தீவு, ஜன. 11

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு ஏ-35 வட்டுவாகல் பாலம் ஊடான வீதி போக்குவரத்து வழமைபோன்று சுமுகமான முறையில் இடம்பெற்று வருகின்றது. தற்போது நாடெங்கிலும் நில வும் சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் நேற்று முன்தினம் தொடக்கம் தொடர்ச்சியான முறையில் மழை பெய்து வருகின்றது.

இதனால் குளம், கடலின் நீர் மட்டமானது வழமையை விட உயர்வடைந்து காணப்படுகின்றது.

இந்நிலையில் தொடர்ச்சியான மழை கிடைப்பதனால் வட்டுவாகல் பாலத்தின் நீர்மட்டம் வழமையை விட சற்று உயர்வடைந்துள்ளது.

எனினும் குறித்த பாலத்தினுடான போக்குவரத்து வழமை போன்று இடம்பெற்று வருகின்றது.

குறித்த பாலம் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதனால் பாலத்தினூடாக பயணம் செய்பவர்கள் சற்று அவதானத்துடன் பயணம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த டித்வா புயல் மற்றும் கன மழையால் நீர்மட்டம் உயர்வடைந்தமையால் வட்டுவாகல் பாலம் இரு துண்டுகளாக பிளவடைந்து தற்காலிக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமே வாழ்வு!

ஐவி.நாகராஜன்


வாழ்வு என்பது ஒவ்வொரு நாளும் பல்வேறு விதமான சிறிய- பெரிய சவால்களை நமக்குத் தந்து கொண்டே இருக்கிறது. நாம் எதிர் கொள்ளும் தோல்விகளால் மனம் உடைந்து வெளிவர முடியாத கூண்டுக்குள் நம்மை அடைத்துக் கொள்வதும், எதிர்- கொள்ளும் தோல்விகளை வெற்றிப்படிகளாக மாற்றுவதும் நம் எண்ணங்களைப் பொருத்தே அமையும்.

என்னால் முடியாது என்பதே மனதின் எண்ணமானால் நாம் எடுத்த காரியத்தைச் சாதிக்க முடியாது. என்னால் முடியும் என்பது எண்ணமாகும் போது வெற்றியை நோக்கிச் செல்வோம்.

தினமும் நாம் மற்றவர்கள் மீது பல வகையான தாக்கத்தை ஏற்படுத்துகிறோம். நம் உறவினர்கள், நண்பர்கள், சக பணியாளர்கள், உடன் செயல்படுகிறவர்கள், புதிதாகக் காண்பவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் நம்மால் பலதரப்பட்ட தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். நம்மைப் பற்றிய உயர்வான எண்ணத்தை மற்றவர்கள் கொள்வதும், நம்மைப் பற்றி தாழ்வாக அவர்கள் எண்ணுவதும் நம் கையில் இருக்கிறது.

நம் உடல் மொழியாலும், செயல்களினாலும் மற்றவர்கள் மீது நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் போது நம்மீதான சமூக நன்மதிப்பு உயர்கிறது. மற்றவர்களுக்கு உதவுவதும், மற்றவர்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவதும், பொதுநலத் தொண்டு புரிவதும் நம் எண்ணங்களின் செயல்பாடே.

நம் மனதில் உலாவரும் எண்ணங்களில் ஒரு சிலவற்றின் மீதே நாம் நம் கவனத்தைத் திருப்புகிறோம். அந்த எண்ணம் காட்டும் வழியில் நடவடிக்கைகள் மேற்கொள்கிறோம். எண்ணற்ற எண்ணங்கள் மனதில் தோன்றி, வந்த வேகத்தில், நம் உணர்வுகளைத் தூண்டாது மறைந்தும் விடுகின்றன.



இலக்கை நோக்கி மனது திசை திருப்பும். இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை ஆராயும். இது குறித்த முந்தைய அனுபவங்கள் மற்றும் மனதில் உள்ள தகவல்கள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்யும். ஆழ்மனதுடன் சைகைகள் வாயிலாகவோ, வார்த்தைகள் வாயிலாகவோ உரையாடும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் எல்லா எண்ணங்களுக்கும் பின்னாலும் ஏற்படுவதில்லை.

எண்ணங்கள் பொதுவாக ஒரு இலக்கை மையப்படுத்தி தோன்றுகின்றன. நோக்கம் வேறுபடும் போதும், ஒவ்வொருவருக்கும் உள்ள அனுபவம் வித்தியாசமாக இருக்கும் போதும், திறமையும் கல்வி அறிவும் வேறுபட்டு இருக்கும் போதும், ஆழ்மனதின் தேவைகள் மாறுபட்டு இருக்கும் போதும், உடல் மன நிலைகள் வெவ்வேறாக இருக்கும் போதும்

எண்ணங்கள் வேறுபடுகின்றன. இதன் காரணமாக எல்லா விஷயங்களிலும் இரு வேறு நபர்கள் ஒரே மாதிரியாகச் சிந்திப்பது இல்லை. அதே நேரத்தில் பொதுவான குறிக்கோளை அடைவதற்கான முயற்சி எடுக்கும்போது பலருடைய எண்ணங்கள் ஒத்திருப்பதையும் காணலாம்.

நம் எண்ணங்களே நம்மை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் வெளிச்சமாகிறது. தரமற்ற எண்ணமுடையவர்கள் சமூகத்தின் பார்வையில் உயர்வானவர்களாகவோ சிறப்புகளுக்குத் தகுதியானவர்களாகவோ கருதப்படுவதில்லை. இதற்குக் காரணம் மனதின் எண்ணங்கள் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே நம் குணமும் அமைந்துவிடுகிறது.

நம் எல்லாச் செயல்களும் எண்ணங்களாலேயே தோன்றுகின்றன. எதேச்சையாக நடக்கும் செயல்களுக்கும் திட்டமிட்டுச் செய்யும் செயல்களுக்கும் இது பொருந்தும். எண்ணத்தின் உருவகமே செயல். மகிழ்வும் துக்கமும் எண்ணத்தின் வெளிப்பாடே.

மனதில் கொடிய, தீங்கிழைக்கும் எண்ணங்கள் ஒருவரைத் தீய செயலுக்கு உட்படுத்துகிறது. மனதில் எழும் எண்ணங்கள் தூய்மையாக, நல்லதாக இருக்குமேயானால் அவர் நற்செயல்கள் செய்கிறார் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

உன்னதமான குணம் ஒருவருக்குத் திடீரென ஏற்படுவதில்லை. மேலிருந்து கொடுக்கப்படுவதுமில்லை. எண்ணங்களை நெறிப்படுத்துவதாலும், கட்டுப்படுத்துவதாலும், வழிமுறைப்படுத்துவதாலும் உயர் எண்ணங்கள் தங்குகின்றன. தவறான, சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத எண்ணங்கள் மனதைவிட்டு ஒதுங்குகின்றன. மனமும் தூய்மை அடைகிறது.

எண்ணங்கள் தூய்மையாக இருக்கும் போது மகிழ்ச்சி நம்மைப் பின் தொடர்கிறது. நம் குணம் மற்றவர்களால் நம் வழித்தடங்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் கருதப்படுகிறது. சான்றோர் அவையில் நமக்கென தனி இடம் கிடைக்கும், போற்றப்படும். எனவே, மறுக்க முடியாத தேவை. அதன் தொடர்ச்சியாக, வளமிக்க நல்வாழ்விற்கு நல்ல சிந்தனைகள் நம் மனதில் எண்ணங்களாக நிலைக்க வேண்டும்.

சுரங்கத்தின் ஆழத்தில்தான் தங்கமும் வைரமும் கிடைக்கும். ஆழ்மனதைத் தேடத் தேட நல்லெண்ணங்கள் ஊற்றாகப் பாயும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 11.01.2026 - 17.01.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 27
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அதிதி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குடும்பத்தில் ஏற்பட்டிருந்த சலசலப்புகள் நீங்கி அமைதி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். கணவன் - மனைவிக் கிடையே சிறு சிறு பிரச்னைகள் தோன்றக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வெளியூர்ப்பயணங்களால் உடல் அசதியும் சோர்வும் உண்டாகும். அதிகாரிகள் கண்டிப்பு காட்டி னாலும் பொறுமை காப்பது நல்லது.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

கணவன் - மனைவிக் கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் குறையும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். பணவரவில் பிரச்னை எதுவும் இருக்காது. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். எதிர்பார்த்த சில சலுகைகள் கிடைக்கும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளை இந்த வாரம் மேற்கொண்டால் சாதகமாக முடியும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வருமானம் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டாகும். நீண்டநாளாக உங்களை வருத்திக்கொண்டிருந்த உடல் உபாதைகளிலிருந்து நிவார ணம் கிடைக்கும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. பணியின் காரணமாகப் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேரும் சந்தர்ப் பம் கனிந்து வரும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தை யுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு இருக்காது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டாகும். சகோதர வகையில் சில பிரச்னைகள் ஏற்படும் என்றாலும் பாதிப்பு இருக்காது. நீண்டநாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அரசாங்கக் காரியங் கள் இழுபறியாகி முடியும். அலுவலகத்தில் உங்களின் பணித்திறன் மேம்படும். ஆதாயமும் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மனதில் லேசான சோர்வை உண்டாக்கும். வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான போக்கு ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியத்துக்காக செலவு செய்ய நேரிடும். அரசாங்க வகையில் சிறுசிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக் காது. பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். நன்மையே ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் குடும்பப் பெரியவர் களின் ஆலோசனையைக் கேட்டு எடுப்பது நல்லது. வேலை வாய்ப்பு உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

பொருளாதார வசதிக்கு குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அதனால், தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். பேச்சினால் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது மிகவும் கவனமாக இருப்பது அவசியம். செலவுகள் அதிகரித்தாலும்கூட அதற்கேற்ப பணவரவு இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பணியின் காரணமாக நீண்டநாள் களாகப் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு எவருக்கும் எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் தோன்றக் கூடும் என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

புதிய முயற்சிகளை வார முற்பகுதியில் தொடங்குவது நல்லது. எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் கேட்ட பண உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் கூடி வரும். அக்கம்பக்கத்தில் இருப்பவர் களுடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். சிலருக்கு எதிர்பாராத பயணங்கள் மேற்கொள்ள நேரிட்டாலும் அதனால் ஆதாயமே உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். எதிர்பாராத பணவரவுக்கும் ஆடை, ஆப ரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியப் பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். சிலருக்கு வெளிமாநிலங்களில் அமைந்திருக்கும் ஆலயங்களை தரிசிக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பத்துடன் விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்துக்குள்ளாகியிருக்கும் உலக நாடுகளின் பாதுகாப்பும் இறைமையும்!



வீரகத்தி தனபாலசிங்கம்

தனது முதலாவது பதவிக் காலத்தில் (2016 - 2020) வெளிநாடுகளில் சண்டையிடுவதற்காக ஒரு அமெரிக்கப் படைவீரனைக் கூட அனுப்பவில்லை என்று டொனால்ட் ட்ரம்ப் பெருமைப் பட்டதை எத்தனை பேர் நினைவில் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. இரண்டாவது தடவையாக வெள்ளை மாளிகைக்குள் 2025 ஜனவரியில் பிரவேசித்த பிறகு பத்துமாத காலத்திற்குள் உலகில் எட்டுப் போர்களை தடுத்து நிறுத்தியதற்காக தனக்கு நோபல் சமாதானப்பரிசு வழங்கப்பட வேண்டும் என்று அவர் தானாகவே கேட்டார். அந்த பரிசு தனக்கு கிடைக்காது என்பதும் அவருக்கு தெரிந்திருந்தது.

இரண்டாவது பதவிக் காலத்தின் தொடக்கத்தில் இருந்தே அவர் நாடுகளை ஆக்கிரமிப்பது குறித்து பேசிவந்திருக்கிறார். எந்தவிதமான பிரச்சினையையும் தோற்றுவிக்காத அயல் நாடான கனடாவை அமெரிக்காவின் 51 வது மாநிலமாக்குவது குறித்தும் டென்மார்க்கிற்கு சொந்தமானதாக கிறீன்லாந்து தீவையும் பனாமா கால்வாயையும் கைப்பற்றுவது குறித்தும் அவர் பேசினார். இஸ்ரேல் பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்வதை ஆதரித்த ட்ரம்ப் காசாவில் இருந்து மக்களை வெளியேற்றிவிட்டு அந்தப் பள்ளத்தாக்கை உல்லாசக் கடற்கரையாக மாற்றுவதற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போரை நிறுத்தியதில் ட்ரம்புக்கு எந்த தொடர்பும் கிடையாது என்று புதுடில்லி திட்டவட்டமாக மறுத்த போதிலும், இதுவரையில் அவர் எழுபதுக்கும் அதிகமான தடவைகள் தெற்காசியாவின் இரு அணுவாயுத நாடுகளும் போரை கைவிட்டதற்கு தானே காரணம் என்று கூறியதாக சர்வதேச ஊடகங்கள் அறிவித்தன. தன்னை ஒரு சமாதான விரும்பி என்று காண்பித்த அதே வேளை, ட்ரம்ப் நைஜீரியா, சோமாலியா, ஈராக், சிரியா, யேமன் மற்றும் ஈரான் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்.

தற்போது புத்தாண்டு பிறந்து மூன்று நாட்களில் தென்னமெரிக்க நாடான வெனிசூலாவில் இரவோடிரவாக குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய ட்ரம்ப், ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவையும் அவரது மனைவி சிலியா புளோரஸையும் அமெரிக்காவுக்கு கடத்திச் சென்று தடுத்து வைத்திருக்கிறார். 'போதைப்பொருள் பயங்கரவாத இயக்கம்' ஒன்றுக்கு தலைமை தாங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு மதுரோ நியூயோர்க் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

வெனிசூலாவில் தலையீடு செய்வதற்கு தன்னை அமெரிக்காவின் அரசியலமைப்பு அனுமதிப்பதாக கூறியிருக்கும் ட்ரம்ப், அமெரிக்க படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் அமெரிக்கர்களை பாதுகாப்பது தனது கடமை என்று வாதிடுகிறார். ஆனால், அமெரிக்காவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை வெனிசூலா தோற்றுவித்தது என்று புத்திசுவாதீனமான எவரும் கூறமாட்டார்கள். அத்துடன் மதுரோ போதைப்பொருள் கடத்தல் குழுமம் ஒன்றை நடத்திவந்தார் என்பதற்கு ட்ரம்ப் நிருவாகம் நம்பகத்தன்மையான சான்று எதையும் உலகின் முன் வைக்கவுமில்லை.

வெனிசூலா மீது ட்ரம்ப் தனது முதலாவது பதவிக்காலத்திலேயே கண்வைத்தார். ஜனாதிபதி மதுரோவுக்கும் அவரது உயர்மட்ட உதவியாளர்களுக்கும் எதிராக முதலில் 2019 ஆம் ஆண்டில் போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி அமெரிக்காவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்க்கட்சி அரசியல்வாதியான பாராளுமன்ற சபாநாயகர் ஜூவான் குவாய்டோவையே வெனிசூலாவின் பதில் ஜனாதிபதியாக அமெரிக்காவும் அதன் மேற்குலக நேசநாடுகளும் அங்கீகரித்தன.

ட்ரம்ப் கடந்த வருடம் ஜனவரியில் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது வெளியுறவுக் கொள்கையில் வெனிசூலாவுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. மதுரோவை உலகில் மிகப் பெரிய போதைப்பொருள் கடத்தல்மன்னர்களில் ஒருவர் என்று குற்றஞ்சாட்டிய அமெரிக்கா 'போதைப் பொருளுக்கு எதிரான போர்' ஒன்றைப் பிரகடனம் செய்தது. மதுரோவை கைது செய்வதற்கு உதவக்கூடிய தகவல்களை தருவோருக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சன்மானம் வழங்கப்படும்என்றும் ட்ரம்ப் நிருவாகம் அறிவித்தது.




கரிபியன் பிராந்தியத்துக்கு ஆயிரக்கணக்கான துருப்புக்களையும் போர்க் கப்பல்களையும் அனுப்பிய ட்ரம்ப் நிருவாகம் போதைப் பொருளைக் கடத்திச் செல்லும் படகுகள் மீது விமானத் தாக்குதல் நடத்தியதாக கூறிய போதிலும், உண்மையில் நூற்றுக்கணக்கான குடிமக்களே கொல்லப்பட்டார்கள்.

வெனிசூலாவுக்குள் இரகசிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ.க்கு அதிகாரமளித்த ட்ரம்ப் அந்த நாட்டில் இருந்து எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்துக்கு தடை விதித்தார். தடை செய்யப்பட்ட எண்ணெயை ஏற்றிச் சென்றதாக கடந்த வெள்ளிக்கிழமை வரை ஐந்து கப்பல்களை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

தனக்கு வரப்போகின்ற ஆபத்தை உணர்ந்து கொண்ட மதுரோ அமெரிக்காவுடன் 'அக்கறையுடனான பேச்சு வார்த்தைகளை' நடத்த விரும்புவதாக அறிவித்ததற்கு மறுநாளான ஜனவரி 3 வெனிசூலாவின் தலைநகர் மீது கடுமையான குண்டுத் தாக்குதல்களை நடத்திய அமெரிக்கப் படைகள் மதுரேவையும் மனைவியையும் கைது செய்து நியூயோர்க்கிற்கு கடத்திச் சென்றன.

ஆனால், பரவலாக எதிர்பார்க்கப்பட்டதை போன்று வெனிசூலாவின் இராணுவக் கட்டமைப்புக்களோ அரசஇயந்திரமோ நிலை குலையவில்லை இராணுவ ஆக்கிரமிப்பை கண்டனம் செய்த அரசாங்கம் அவசர கால நிலையைப் பிரகடனம் செய்தது. கடந்த வருடத்தைய நோபல் சமாதானப் பரிசைப் பெற்றவரான வெனிசூலாவின் வலதுசாரி எதிர்க்கட்சி தலைவியான மறியா கொறினா மச்சாடோ அமெரிக்க ஜனாதிபதியின் கொள்கைகளை முற்று முழுதாக ஆதரித்து வருகின்ற போதிலும், அவர் நாட்டை ஆட்சி செய்வதற்கு தேவையான மக்கள் ஆதரவையும் மதிப்பையும் கொண்டவரல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி நிராகரித்துவிட்டார்.

> சர்வதேச சட்டம் தனக்கு தேவையில்லை என்றும் இரண்டாவது உலகப் போருக்கு பின்னரான காலப்பகுதியில் அமெரிக்காவின் உதவியுடன் நிறுவப்பட்ட உலக ஒழுங்கு இன்று அநாவசியமான ஒரு சுமையாக இருக்கிறது என்றும் ட்ரம்ப் கூறிய வார்த்தைகள் உலகம் வரும் நாட்களில் எதிர் நோக்கப்போகும் ஆபத்துக்கு கட்டியம் கூறுகிறது.




வெனிசூலா உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் துணை ஜனாதிபதி டெல்சி றொட்ரிக்கஸ் மறுநாளே பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார். அமெரிக்காவுடன் ஒத்துழைக்க மறுத்தால் டெல்சி பாரிய விலையைச் செலுத்த வேண்டியிருக்கும் என்று ட்ரம்ப் உடனடியாகவே எச்சரிக்கை செய்தார். பொருளாதார நெருக்கடி மற்றும் எதேச்சாதிகார ஆட்சிமுறை காரணமாக மதுரோவின் அரசாங்கம் மீது வெனிசூலா மக்களில் பெரும்பாலானவர்கள் வெறுப்புக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மை.

ஆனால், இறைமையுடைய ஒரு நாட்டின் தலைவரை கடத்திச் செல்வதற்கு அமெரிக்காவுக்கு எந்த அருகதையோ அல்லது அதிகாரமோ கிடையாது. தவறான ஆட்சி மற்றும் அடக்குமுறைக்காக வெளிநாட்டுத் தலைவர்களை கடத்திச் சென்று சிறைவைப்பதே ட்ரம்பின் வேலையாக இருக்குமானால், அமெரிக்காவின் பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவுடன் அதிகாரத்தில் இருக்கும் சிலர் உட்பட அத்தகைய ஆட்சியாளர்களின் நீண்ட பட்டியலில் இருந்து அவர் தெரிவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

தான் விரும்பும்வரை வெனிசூலாவை அமெரிக்கா நிருவகிக்கும் என்றும் அதன் பாரிய எண்ணெய் வளங்களைப் பயன்படுத்தப் போவதாகவும் ட்ரம்ப் வெளிப்படையாகவே பிரகடனம் செய்கிறார். சிறையில் இருக்கும் மதுரோவின் விசுவாசிகளினால் நிருவகிக்கப்படும் இடைக்கால அரசாங்கம் அமெரிக்கா தனக்கு அவசியமானது என்று உணருகின்ற சகலதையும் தருகிறது. வெனிசூலாவின் எண்ணெய்த் தொழிற்துறையை அமெரிக்கா இலாபகரமாக மீளக்கட்டியெழுப்பும் என்றும் அந்த நாட்டுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற பணம் வழங்கப்படும் என்றும் அவர் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் நியூயோர்க் ரைம்ஸூக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார்.

தென்னமெரிக்காவிலும் கரிபியன் பிராந்தியத்திலும் இரு நூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலமாக தலையீடுகளைச் செய்த நீண்ட வரலாற்றை அமெரிக்கா கொண்டிருக்கிறது. ஆனால், வெனிசூலா மீது ஜனவரி 3 நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களே தென்னமெரிக்க நாடொன்றின் மீதான அமெரிக்காவின் முதன் முதலான நேரடியான இராணுவ தாக்குதலாகும். 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து அமெரிக்க கண்டத்தின் அயல்நாடுகளில் அமெரிக்கா பொருளாதார நெருக்குதல்கள் ஊடாக மாத்திரமல்ல, படையெடுப்புக்கள் மற்றும் ஆக்கிரமிப்புக்கள் என்று இராணுவ ரீதியாகவும் தலையீடுகளைச் செய்து வந்திருக்கிறது.

வெனிசூலாவில் கடந்தவாரம் அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை 1989 ஆம் ஆண்டில் பனாமா நாட்டின் சர்வாதிகாரி மனுவேல் நொறீகாவைக் கைதுசெய்த நடவடிக்கையை நெருக்கமாக ஒத்ததாக இருக்கிறது. முன்னர் சி.ஐ.ஏ.யின் நண்பராக விளங்கிய நொறீகாவை கைது செய்வதற்காக பனாமாவை ஆக்கிரமிப்பதற்கு அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், சுமார் 27 ஆயிரம் துருப்புக்களை அனுப்பினார். அவரைக் கைதுசெய்து அமெரிக்காவுக்கு கொண்டுசென்று இன்று மதுரோவுக்கு ட்ரம்ப் செய்ததைப் போன்று போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றங்களில் புஷ் நிருவாகம் நிறுத்தியது.

பிரேசில், சிலி மற்றும் ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களை பதவி கவிழ்த்து இராணுவ சர்வாதிகாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா உதவிய போதிலும், தென்னமெரிக்காவிலும் கரிபியனிலும் வெளிப்படையான இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்கா வரலாற்று ரீதியாக அதன் நெருங்கிய அயல் நாடுகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தியே வந்திருக்கிறது. ஆனால், தற்போது தென்னமெரிக்க நாடொன்றின் மீது நடத்தப்பட்ட நேரடியான இராணுவத் தாக்குதல் அமெரிக்காவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளில் ஏற்பட்டிருக்கும் முக்கியமான மாற்றத்தைக் குறித்து நிற்கிறது எனலாம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டில் சகல தரப்புகளையும் அரவணைத்து கலந்தாலோசனையின் மூலமாக நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டும்!



கலாநிதி ஜெகான் பெரேரா

கடந்த வருடத்தை திரும்பிப் பார்க்கும்போது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டை உறுதி குலையச் செய்துவிடும் என்று சனத்தொகையில் செல்வாக்குமிக்க பிரிவுகள் மத்தியில் நிலவியா அச்சவுணர்வு இல்லாமல் செய்யப்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. வலிமை வாய்ந்த ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) வின் தலைமைத்துவத்துடன் கூடிய புதிய அரசாங்கம் மார்க்சியப் பாரம்பரியத்தில் தனியார் சொத்துடைமையை மதிக்காமல் இருக்கக்கூடும் என்று விசனம் வெளிப்படுத்தப்பட்டது. அது மெய்யாகவில்லை.

எந்தவிதமான கொந்தளிப்பும் இல்லாமல, ஆட்சிமுறையில் முறிவு ஏற்படாமல் மிகவும் சுமுகமான நிலைமாறலை அரசாங்கம் செய்து கொண்டது. இந்த தொடர்ச்சி பாராட்டப்பட வேண்டியதாகும். பொதுவில், தேர்தல்கள் மூலமான தீர்க்கமான மாற்றத்தை தொடர்ந்து சீரான அரசியல் நிலைமாறல்களை தடங்கல்கள் இல்லாத ஜனநாயக வலுப்படுத்தலின் முன்கூட்டிய குறிகாட்டிகளாக அடையாளப்படுத்த முடியும்.

ஏற்கெனவே இருந்த நிறுவனங்களை முற்றுமுழுவதுமாக அழித்துவிடுவதில் நாட்டம் காட்டாமல் அவற்றை புதிய அரசாங்கம் மதித்துச் செயற்படும்போது ஜனநாயக நியாயப்பாடு வலுப்படுத்தப்படுகிறது. இந்தவிடயத்தில் அரசாங்கத்தின் முதல் வருடம் நேர்மறையானதாக இருந்திருக்கிறது. ஆனால், அரசாங்கம் எதிர்நோக்குகின்ற சவால்கள் பெருவாரியானவை.

கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை அரசாங்கத்தினால் நியமிக்கமுடியாமல் இருக்கின்றமையும் எதிர்க்கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் ஆட்சேபனைகளை கருத்தில் எடுக்காமல் அரசாங்கம் தனது சொந்த தெரிவுக்கு உரியவரையே அந்தப் பதவிக்கு நியமிப்பதில் உறுதியாக நிற்கின்றமையும் ஆழமான பிரச்சினையை பிரதிபலிக்கிறது. கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுபவர்களை நிராகரிப்பதில் அரசியலமைப்பு பேரவை பக்கச்சார்பான தீர்மானங்களை எடுக்கின்றது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது.

உயர் பதவிகளுக்கான அரசாங்கத்தின் நியமனங்களில் சிலவற்றைத் தவிர, பெரும்பாலானவை ஆளும் கட்சி உறுப்பினர்களையும் அவர்களது சகாக்களையும் கொண்ட குறுகிய வட்டத்திற்குள் இருந்தே செய்யப்படுகிறது. அரசாங்கத்தின் மையக் கட்சியான ஜே.வி.பி. ஐந்து சதவீதத்துக்கும் அதிகமில்லாத பாரம்பரியமான வாக்கு வங்கியையே கொண்டிருந்தது.

உயர்மட்ட அதிகாரிகளின் நியமனங்களை ஜே.வி.பி.யின் உறுப்பினர்களுக்கும் அவர்களது சகாக்களுக்கும் மட்டுப்படுத்துவது சிறந்தவர்களை நியமிப்பதற்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்து விடுகிறது. தகுதி வாய்ந்த பெருமளவானோரை புறமொதுக்குவது தேசிய நலன்களுக்கு பாதகமானது. சிரேஷ்ட அரசாங்க நியமனங்களுக்காக கட்சிக்குச் சார்பான குறுகிய ஒரு குழுவில் தங்கியிருப்பதில் அரசாங்கத்துக்கு சொந்தக் காரணங்கள் இருக்கலாம் என்ற போதிலும், அது திறமைசாலிகளையும் நிபுணர்களையும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை மட்டுப்படுத்திவிடுகிறது.

தரம் 6 மாணவர்களுக்கான பாடப்புத்தகத்தில் தன்னினச் சேர்க்கையுடன் தொடர்புடைய இணையத்தளத் தொடுப்பு உள்ளடக்கப்பட்டதன் விளைவாக தோன்றிய சர்ச்சை ஒரு சதிவேலை போன்று தெரிகிறது. இது தொடர்பில் கல்வியமைச்சராகவும் இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய மீது அவரது அரசியல் எதிரிகள் அநியாயமான முறையில் குற்றம் சுமத்துகிறார்கள்.

சிவில் சேவையை அரசியல்மயப்படுத்துவதை விடுத்து துறைசார் நிபுணத்துவமுடையதாக்கும் நீண்டகால அடிப்படையில் தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் சீர்திருத்தங்களை நிலைபேறானவையாக வைத்திருப்பதில் பெருமளவுக்கு அரசாங்கங்கள் வெற்றி கண்டுவந்திருக்கின்றன. இலங்கையில் அரச அலுவலர்கள் சேவையில் இருக்கும்போது தேர்தல்களில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை (தாபனக்கோவை). அவர்கள் சகல மக்களுக்கும் சேவை செய்ய வேண்டியவர்களாக இருப்பதால் எந்தவொரு கட்சியுடனும் தொடர்பைக் கொண்டிருக்கக்கூடாது எனபதையே அது குறித்து நிற்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெருவாரியான வாக்குறுதிகளை நாட்டு மக்களுக்கு வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்றத் தவறியிருப்பதாக எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் உள்ளாகியிருக்கிறது. இது விடயத்தில், நம்பத் தகாத வாக்குறுதிகளை வழங்கி அந்த தேர்தல்களில் போட்டியிட்ட மற்றைய அரசியல் கட்சிகளுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் வேறுபாடு கிடையாது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரங்களை பொறுத்தவரை நாட்டைப் பல வருடங்களுக்கு பின்னோக்கித் தள்ளி விட்டது என்பதே பிரச்சினையாகும்.

2018 ஆம் ஆண்டில் இருந்த மட்டங்களுக்கு பொருளாதாரம் பின்னடைவைக் கண்டது. அதற்கு தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகள் காரணம் அல்ல. மிகவும் திறமைவாய்ந்த தலைமைத்துவம் ஒன்றினால் கூட, அந்த இழந்த வருடங்களை இல்லாமல் செய்துவிட முடியாது. கடந்த வருடம் பொருளாதாரம் சுமார் ஐந்து சதவீத வளர்ச்சிக்கு மீட்சிபெற்று வந்தது. ஆனால், அந்த மீட்சி, தேசிய வருமானத்தின் பத்து சதவீதத்தை துடைத் தெறிந்துவிட்டதாக மதிப்பிடப்படும் டித்வா சூறாவளியைத் தொடர்ந்து புதிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறது.

சூறாவளியை தொடர்ந்து நாடு வெட்கப்படுவதற்கு அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் காரணமாக இருக்கின்றன. நிவாரணம் வழங்கல் மற்றும் மீட்சிக்கான செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு பதிலாக, பல கட்சிகள் மற்றைய தரப்புகள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதிலேயே கவனத்தைச் செலுத்தின. பரஸ்பர நம்பிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியா



**"பதின்மூன்றாவது திருத்தத்தின் ஊடான அதிகாரப்பரவலாக்கமும் நம்பகத்தன்மை கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைகளும் பேச்சளவில் இல்லாமல் நடைமுறைப்படுத்தலை நோக்கி நகர வேண்டும்."**

னதாக இருக்கும் ஒரு தருணத்தில் அரச இயந்திரம் மீது பொதுமக்களின் நம்பிக்கையை மலினப்படுத்தக் கூடியதாக பிரதமர் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை உதாரணத்துக்கு கூறலாம்.

அரசியல் நோக்கத்துடன் சில கட்சிகள் தாக்குதலை தொடுத்தாலும், அரசாங்கம் ஆட்சிமுறை தொடர்பிலான அணுகுமுறையில் சகல தரப்புகளையும் அரவணைக்கும் போக்கை உறுதியாக கடைப்பிடிக்க வேண்டிய தேவை இருக்கிறது. கொள்கை மாற்றத்தை நிலைபேறானதாக பேணுவது என்பது தேர்தல் வெற்றியில் மாத்திரமல்ல, சகலரையும் அரவணைக்கும் செயன்முறைகளிலும் தங்கியிருக்கிறது. பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தி திணிப்பவற்றை விடவும் அரவணைப்பு அணுகுமுறை நீடித்து நிலைக்கக்கூடியதாகும்.

தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. இருதரப்புகளின் ஒத்துழைப்புக் கோட்பாடு இதையே உணர்த்துகிறது. அதற்கு எதிர்க்கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனது அணுகுமுறையில் நியாயபூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் நடந்துகொள்கிறார்.

இருதரப்புகளின் ஒத்துழைப்பின் பரந்தளவிலான ஒரு பார்வை பிரதான எதிரணிக் கட்சிகளுக்கு அப்பால் இன, மதச் சிறுபான்மைச் சமூகங்களைமும் உள்ளடக்குவதாக இருப்பது அவசியம். பாகுபாடு காட்டாமல் சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவது என்ற அரசாங்கத்தின் உறுதிப்பாடு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வெளிப்படையான இனவாதம் குறைந்திருக்கிறது. கடந்தகால நிலைவரத்தை விடவும் தற்போது பெருமளவுக்கு பௌதீகப் பாதுகாப்புடன் தாங்கள் வாழ்வதாக பெரும்பான்மைச் சமூகங்கள் உணருகின்றன. இந்த பயன்விளைவுகளை குறைத்து மதிப்பிடக் கூடாது. ஆனால், இனங்களுக்கு இடையிலான இணக்கத்துக்கு ஆழமான அச்சுறுத்தல்கள் தொடர்ந்து நீடிக்கவே செய்கிறது.

தேசிய நல்லிணக்கத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு அரசாங்கம் மேலும் கூடுதலான பணிகளைச் செய்யவேண்டியிருக்கிறது. நல்லிணக்கம் என்பது அடையாளபூர்வமானதாக இல்லாமல் களத்தில் ஏற்படும் மாற்றத்தில் வேர்விட்டதாக இருக்க வேண்டும். இந்த பணிக்கு அரசியல் அதிகாரப்பகிர்வு மிகவும் முக்கியமானதாகும். சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள் தேசிய அபிவிருத்தியில் இருந்து தாங்கள் தொடர்ந்தும் புறமொதுக்கப்படுவதாக உணருகிறார்கள்.

தேசிய தலைவர்களின் விஜயங்களையும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் அவர்கள் வரவேற்கின்ற அதேவேளை, அபிவிருத்தி தொடர்பிலான வாக்குறுதிகள் அடிக்கல் நாட்டுதலுடனும் வைபவங்களுடனும் மட்டுப்படுத்தப்படுபவையாக இருப்பது குறித்து ஏமாற்றமும் விரக்தியும் அடைகிறார்கள். பௌத்த மக்கள் வாழாத பகுதிகளில் பௌத்த ஆலயங்களை நிர்மாணிப்பது நல்லிணக்கமாக அன்றி அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகிறது.

பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலமாக வழங்கப்பட்டிருக்கும் அரசியலமைப்பு ரீதியான அதிகாரப்பரவலாக்க கட்டமைப்பு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சிறுபான்மைச் சமூகங்களின் மனக்குறைகளை கையாளுவதற்கான மிகவும் நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையாகும். இது உடன்பாட்டின் மூன்றாவது ஒரு தரப்பாக இந்தியாவின் உதவியுடன் கொண்டு வரப்பட்டது. நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டுவரும் மாகாணசபை தேர்தல்களை மேலும் காலந்தாழ்த்தாமல் நடத்த வேண்டியது அவசியமானதாகும்.

ஏழு வருடங்களுக்கும் அதிகமான காலமாக மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. இந்த நீண்ட இடைநிறுத்தம் ஜனநாயக நடைமுறையையும் சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையையும் மலினப்படுத்துகிறது. இந்தியாவிலோ அல்லது சுவிட்சர்லாந்திலோ எம்மால் காணக்கூடியதாக இருக்கும் சர்வதேச அனுபவம் பிராந்திய நிறுவனங்கள் தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்படும்போது மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவையாகவும் பெருமளவுக்கு பயனுறுதியுடையவையாகவும் இருக்கும் என்பதை காட்டுகிறது.

கருத்தியல் அடிப்படையில் சகலரையும் சமத்துவமான குடிமக்களாக நடத்துவது என்பது போதுமானதல்ல. ஜனநாயக சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு சமூகங்களை அவற்றின் நியாயபூர்வமான நலன்களுடன் கூட்டுப் பாத்திரங்களாக அங்கீகரிப்பது அவசியம். அதிகாரப் பகிர்வு குறிப்பிட்ட சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை அனுமதிக்கிறது என்பதுடன் அன்னியப்படுத்தலை குறைத்து தேசிய ஒருங்கிணைப்பை பலப்படுத்துகிறது.

அரசாங்கம் அதன் பதவிக்காலத்தின் முதலாவது வருடத்தில் இந்த பிரச்சினைகளில் பலவற்றை ஏற்றுக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருந்தது. ஆனால் அவ்வாறு ஏற்றுக் கொண்டதை இன்னமும் அரசாங்கம் நடைமுறையில் செயற்படுத்தவில்லை. ஆட்கள் காணாமல் போனமை, நீண்டகாலமாக ஆட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது, நில ஆக்கிரமிப்பு மற்றும் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பது ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது சீர்திருத்தங்களைச் செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட விடயங்களில் கூட பதிலீடாக கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்ட சட்டமூலம் சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களுக்கு குறைவானதாகவே இருக்கிறது.

இந்த அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கமான முறையில் கையாளப்படுகின்ற காலப்பகுதியாக புதிய வருடம் அமைய வேண்டும். அவ்வாறு இல்லையேல் பிரச்சினைகள் மேலும் புரையோடி மோசமடைவதுடன் அபிவிருத்திச் செயன்முறையில் முழுமையாக ஈடுபடுவதில் இருந்து அரசாங்கத்தின் கவனம் திசைதிரும்பவும் வழிவகுத்துவிடும். பதின்மூன்றாவது திருத்தத்தின் ஊடான அதிகாரப் பரவலாக்கமும் நம்பகத்தன்மை கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைகளும் பேச்சளவில் இல்லாமல் நடைமுறைப் படுத்தலை நோக்கி நகர வேண்டும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரினிமீதான நம்பிக்கையீன பிரேரணையும் சிறீதரன்மீதான நடவடிக்கைக் கடிதமும்!

**பனங்காட்டான்**

இலங்கைஅரசியலில், இருதரப்பிலும் வித்தியாசமானஆட்டம் ஆரம்பமாகியுள்ளது. இருதரப்பிலும் என்றுகுறிப்பிடுவதுதெற்கிலும் தமிழர் தாயகத்திலும் என்பதாகும்.

ஆட்சித்தரப்புஆட்டம் பிரதமர் ஹரினி அமரசூரியவை மையப்படுத்தியது. இவரே கல்விஅமைச்சராகவும் இருப்பதால் புதியகல்வித்திட்டம் ஒன்றை இவ்வருடம் அறிமுகம் செய்தார். இதில் என்ன மாற்றம் வந்துள்ளதுஎன்றுபுரியாமலே, எதிர்க்கட்சிகள் என்றால் எதனையும் எதிர்க்கவேண்டுமென்றபாணியில் எதிர்ப்புக் கிளம்பியது.

ஆறாம் வகுப்புபாடப்புத்தகத்தில் விசமிகள் சிலர் புகுத்திய வேண்டப்படாத இடைச்செருகல் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. ஹரினிக்கும் ஜே.வி.பி. தலைமைக்கும் இடையில் ஏற்கனவேபிச்சல் பிடுங்கல் என்றும் அவரை பதவி நீக்கஜே.வி.பி. செயலர் ரில்வின் சில்வா முயற்சிப்பதாகவும் ஊடகங்கள் தெரிவித்துவந்தன. இதனை சஜித், நாமல் தலைமையிலான கட்சிகள் நாடாளுமன்றத்திலும் சொல்லிவந்தன. ஹரினியைப் பதம் பார்த்தால் அநுர அரசுக்குள் வெடிப்பைஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

அநுரஅரசின் அமைச்சரவையில் ஹரினிமட்டும் ஜே.வி.பி. உறுப்பினர் அல்லாதவர். இவரதுபிரதமர் பதவியில் அமைச்சர் பிமல் ரத்னநாயக்க கண் வைத்திருப்பதாகவும் பரபரப்பானசெய்திகள் வந்தன. இந்தச் சூழ்நிலையில் பாடப்புத்தக விவகாரத்தை பெரிதாக்கி, அரசை ஆட்டிப் பார்க்கலாம் என்ற முனைப்பில் எதிர்க்கட்சிகள் இணைந்து அவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைமுன்வைத்துள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதில் ஒப்பமிட்டது பரபரப்பானசெய்தியானது. அநுர அரசின் எண்ணிக்கையோடுஒப்பிடுகையில் எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்ற போதுமானதல்ல. இதுஎதிர்க்கட்சிகளுக்குதெரியாததுமல்ல.

எனினும் அரசுக்கெதிராகசுமத்தவேண்டியஅனைத்துகுற்றங்களையும் ஒரேயடியாகநாடாளுமன்றில் கூறி அதனை அதிகார ஏட்டிலும், பொதுஊடகங்களிலும் பிரசித்தப்படுத்தினால் போதுமென்றகோதாவிலேயே பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் இந்தமுன்னெடுப்புக்குஇவ்விடயத்தில் துள்ளிக் கொண்டிருக்கும் நாமலின் தந்தையான மகிந்தராஜபக்சஆதரவில்லை. இதனை அவரே வெளிப்படுத்தியுள்ளார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதமர் ஹரினி மீதான அநாவசியத்தாக்குதல் களைகண்டித்துள்ளார். நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியுற்றாலும் ஜே.வி.பி.யினரின் நிலைப்பாட்டை அறியவாவது இது உதவுமென சஜித் தரப்புநம்புகிறது.

ஹரினி ஒரு பெண் என்பதால் தான் தாக்கப்படுகிறார் எனசிலகுரல்கள் எழும்புகின்றன. சிறிமாவோபண்டாரநாயக்க பிரதமரானபோதும், அவரது சிவில் உரிமைகளை ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசு ரத்துச் செய்தபோதும் இதே கோசங்கள் எழும்பியதுண்டு. ஆனால், ஹரினி இவற்றை எதிர்கொண்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தஒருவிடயம் அவரை சிங்கப் பெண்ணாக காட்டியுள்ளது.

2019 - 2024 ஆட்சிக் காலங்களில் நீதிமன்றங்களில் வாபஸ் பெறப்பட்ட 102 வழக்குகளில் 65மீளஎடுக்கப்பட்டு மீண்டும் நீதிமன்றங்களுக்குசெல்கின்றன எனஅறிவித்து, எதிரணியினருக்கு வயிற்றோட்ட மாத்திரை கொடுத்துள்ளார் ஹரினி. அந்த 65 வழக்குகளில் தாங்களும் இருப்போமோ என்றஅச்சம் எதிரணியில் உள்ளசிலஎம்.பிக்களுக்கும் முன்னாள் அமைச்சர்கள் சிலருக்கும் கலக்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதுஆட்சித் தரப்பின் இலக்கு.

ராஜபக்சக்கள், மைத்திரிபாலசிறிசேன - ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கால பிரமுகர்கள் பலர் ஏற்கனவே ஊழல் வழக்குகளில் கைதாகி பிணையில் உள்ளனர். பொதுஜன பெரமுனவின் முக்கியபுள்ளியானஜோன்சன் பெர்ணான்டோவும் அவரதுமகனும் அண்மையில் கைதாகினர். போகிறபோக்கைப் பார்க்கின் ராஜபக்சக்களோடுநெருக்கமாக இருந்தவர்கள் பலரின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.



இந்தநிலைதொடருமானால் அநுர அரசுக்கு எதிரான முன்னெடுப்புகள் குழிகளுக்குள் விழும். மாகாணசபைத் தேர்தல் காணாமல் போகும். புதிய அரசியலமைப்பு தயாரிப்பை காட்டி அரசின் ஆட்சிக்காலம் நீடிப்புக்கு உள்ளாகலாம். 1972ல் சிறிமாவோவும், 1978ல் ஜே.ஆரும் புதிய அரசியலமைப்பைக் காட்டித்தான் நாடாளுமன்ற ஆயுளை அவ்வப்போது நீடித்தார்கள் என்பதுரில்வினுக்கும் அநுரவுக்கும் தெரியாததா?

தெற்குக்குச் சமாந்தரமாக தமிழர் தரப்புஅரசியல் வேறுவகைஓட்டம் நடத்துகிறது. எடுத்ததற்கெல்லாம் கட்சி உறுப்பினர்களிடம் விளக்கம் கேட்பதும் அவர்களை இடைநீக்கம் செய்வதும் தமிழரசுகட்சியின் பதில் செயலாளரது தினசரி வேலையாகி விட்டது. எப்படியாவது தமதுபெயர் ஊடகங்களில் வந்தால் போதுமென இவர் நினைக்கிறார் போலும்.

வன்னிப் பிராந்திய முன்னாள் எம்.பி. சிவமோகன் சிலநாட்களுக்கு முன்னர் கட்சியின் முன்னணி பிரமுகர்களை பெயர் கூறி விளாசித் தள்ளியகண்டனங்களைஎல்லாரும் படிக்கநேர்ந்தது. எனது அறிவுக்குஎட்டியவகையில் கட்சித் தலைமையை இவ்வாறுகிழித்துத் தொங்கப்போட்ட ஓர் அறிக்கையைமுன்னர் எப்போதும் படித்ததாகஞாபகம் இல்லை.

> பிரதமர் ஹரினிஅமரசூரிய மீதான எதிரணியினரின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஓரந்தள்ள, முன்னைய ஆட்சிக்காலங்களில் மீளப்பெறப்பட்ட 65 வழக்குகளை தூசு தட்டி எடுத்துள்ளது அநுரஅரசு. சிறீதரன் எம்.பியை கட்சியிலிருந்து ஒதுக்குவதற்கு கடிதம் எழுதியுள்ள தமிழரசுக் கட்சி ஆப்பிழுத்த நிலைக்குதள்ளப்பட்டுள்ளது என்கின்றனர் கட்சியின் உள்வீட்டுக்காரர்கள்.



சிலநாட்களுக்குமுன்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசுகட்சிக்கு எதிராக சிலகருத்துகளை தெரிவித்திருந்தார். தொடர்ந்து எங்களை அடித்தால் நாங்களும் திருப்பி அடிப்போம் என்று ஊடகங்கள் ஊடாக தமிழரசுக்கட்சி கஜேந்திரகுமாரை எச்சரித்திருந்தது. இவர் ஒரு பனங்காட்டு நரி. சலசலப்புக்குஅஞ்சமாட்டார். இப்போதுசிவமோகனுக்கும் இவ்வாறான ஓர் எச்சரிக்கையை தமிழரசுத் தலைமைவிடுமா? நிச்சயமாக மௌனம்தான் சாதிப்பார்கள்.

தமிழரசின் வடக்குகிழக்கைச் சேர்ந்த முக்கியமான பலருடன் கடந்த சிலநாட்களாக உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது, கட்சியின் பதில் தலைமை கண்களை மூடிக்கொண்டிருப்பதாக சிலர் சொல்கிறார்கள். இல்லையில்லை - அவர் பதில் செயலாளரை கண்காணித்துக் கொண்டிருப்பதாக வேறுசிலரது கருத்து.

அரசமைப்புச் சபையில் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதியாகவுள்ள கிளிநொச்சி எம்.பி. சிறீதரன் மீது இப்போது கட்சியின் பார்வை திரும்பியுள்ளது. இவர் மீதானகுற்றச்சாட்டுக்குகட்சிவிளக்கம் கேட்கவில்லை. ஆனால், அந்தப் பதவியிலிருந்து விலகுமாறு கடிதம் அனுப்பியுள்ளது. இதனை விளக்கமாகச் சொல்வதானால் சிறீதரன் மீது நடவடிக்கை எடுக்க முடியாதெனஉள்வீட்டுக்காரர்கள் சொல்கிறார்கள்.

அப்படியென்றால் ஏன் இந்தக் கடிதம் என்ற கேள்வி எழுகிறது. எதிர்காலத்தில் இவர்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் அதற்கு பலம் கூட்ட இக்கடிதம் உதவலாம் என்று நம்புகிறார்களாம். அதுமட்டுமன்றி சிறீதரனை கட்சியிலிருந்து வெளியேற்ற எவராவது முயற்சித்தால் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அதற்கு உடன்படமாட்டாரென்றும் அவரது பதவிக்கானஅதிகாரத்தை பயன்படுத்துவாரென்றும் மார்ட்டின் வீதியிலுள்ள மூத்தோர் கிளப்பில் உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

எல்லாவற்றையும் மீறி சிறீதரனைகட்சியிலிருந்து நீக்கம் செய்தால் அதன் பாதிப்பு கட்சிக்கே என்றும் தலைமை மேசையில் உள்ளவர்களுக்கு தெரியுமாம். சேலைமுள்ளில் பட்டாலென்ன, முள் சேலையில் பட்டாலென்ன சேலைக்குத்தான் சேதம் என்ற நிலையில் கட்சி இருக்கிறது அதாவது, சிறீதரனை கட்சியிலிருந்து நீக்கினால் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இப்போது தக்கவைத்துள்ள ஓர் ஆசனம்கூட இல்லாமல் போகும். சிறீதரன் சுயேட்சையாகக் கேட்டாலும் வெற்றி பெறுவார் என்பது கட்சிக்காரர்கள் அனைவருக்குமே தெரிந்த விடயம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அண்மைய இந்தியமற்றும் நோர்வே பயணங்களை தமிழரசுச் கட்சியினர் அங்க லாய்ப்புடன் உன்னிப்பாகக் கவனிக்கின்றனர். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை பூரணமாகநடைமுறைப்படுத்த இந்தியாமுன் வராதுஅசட்டையாக இருப்பதை தங்களுக்கான பின்னடைவாகக் கருதும் தமிழரசுக் கட்சி, மாகாண சபையை ஒதுக்கிவிட்டு புதிய அரசியலமைப்பில் சமஷ்டி ஆட்சியைக் கோரும் கஜேந்திரகுமாரின் சர்வதேச பயணத்தை யிட்டு பலவாறாகசிந்திக்கிறது.

ஏதோஒருஐரோப்பியநாடு இதன் பின்ணணியில் இருக்கலாம் என மூக்கில் விரலை வைத்துஆட்டும் தமிழரசுக் கட்சியினர், ஒரு குறிப்பிட்ட நாட்டில் சந்தேகம் கொண்டுள்ளனர். எதுவானாலும் மலிவாகும்போது சந்திக்கோ சந்தைக்கோவரும் தானே. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெனிசுலாவின் மீதான இராணுவ நடவடிக்கை பிராந்திய மேலாதிக்கத்ததை புதுப்பிக்குமா?



-யதீந்திரா

வெனிசுலா விவகாரம்தான் இன்றைய நிலையில் உலகளவில் முக்கியமான விவாதப் பொருளாகும். ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம், விசேட இராணுவ நடவடிக்கை ஒன்றில் மூலம், வெனிசுலா ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோவை கைது செய்து, அமெரிக்காவிற்குள் கொண்டு சென்றது. தற்போது அவர் அமெரிக்கச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை எதிர்கொண்டிருக்கின்றார். இந்த நடவடிக்கை வழமைபோல், சர்வதேசளவில் கண்டனங்களையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. சர்வதேச சட்டங்களின் வழியாக விடயங்களை நோக்குபவர்கள் இது ஒரு அப்பட்டமான மீறல் என்று கூறிவருகின்றனர். ஆனால் யதார்த்தமோ இவ்வாறான விமர்சனங்களுக்கு அதிக தொலைவில் இருக்கின்றது.





**அமெரிக்காவின் நகர்வானது, முன்னைய பனிப்போர் கால பிராந்திய மேலாதிக்கத்திற்கான பச்சைக் கொடியாகவும் மாறலாம் என்பதுதான் விடயம். அன்றைய பனிப்போர் கால அரசியல் நிர்பந்தங்கள்தான், இந்திராகாந்தி நிர்வாகம் அயல்நாடுகளின் மீதான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது.**

ஏனெனில் சர்வதேச அரசியலை சர்வதேச சட்டங்கள் வழிநடத்துவதில்லை. அதற்கு மாறாக, உலக அதிகார சக்திகளின் நலன்களே உலக அரசியலை நகர்த்தும் அச்சாணியாக இருக்கின்றது. வெனிசுலா விவகாரம் மீண்டும் ஒரு முறை இதனை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இது தொடர்பில் அமெரிக்காவிலும் கூட ஏராளமான விமர்சனங்கள் உண்டு. சிலர் இதனை, ஜனாதிபதி ட்ரம்பின் எதேச்சாதிகார அணுகுமுறை என்று வர்ணிக்கின்றனர். பொதுவாக அமெரிக்காவின் நகர்வுகளை அந்தக் காலத்தில் ஜனாதிபதியாக இருப்பவர்களை முன்வைத்துத்தான் நோக்குவதுண்டு. ஆனால் அது சரியான பார்வை அல்ல. ட்ரம்ப் என்னும் ஒரு தனிநபர் மிகவும் பலமான அமெரிக்க கட்டமைப்பை மீறி, அமெரிக்க நலன்களுக்கு எதிராக செயற்பட முடியுமா? காலத்திற்கு காலம் அமெரிக்க ஜனாதிபதியாக வருபவர்கள், அமெரிக்காவின் மேலாதிக்கத்தை பாதுகாப்பதற்கான பாதுகாவலர்களாக மட்டுமே தொழிற்படுகின்றனர். அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலத்தை கையாளுவதற்காக, அந்தக் காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அதற்கு தலைமையேற்கும் காரியத்தையே அவர்கள் செய்கின்றனர். இது ட்ரம்பிற்கான காலம்.

1989இல், அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஸ், பனாமாவின் மீதான இராணுவ நடவக்கையை மேற்கொண்டு, சர்வாதிகாரியான மானுவல் நொரியோகாவை அகற்றினார். கைது செய்யப்பட்ட நொரியேகா 40 ஆண்டுகள் அமெரிக்கச் சிறையில் இருந்தார். பனாமா கால்வாய் தொடர்பில் அமெரிக்காவுடனான உடன்பாட்டை மீறியமை, அமெரிக்காவிற்குள் போதை வஸ்த்தை கடத்தியமை, அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவரை கொன்றமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே, புஸ் நிர்வாகம் பனாமாவின் மீதான இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டது.

35 வருடங்களின் பின்னர் அவ்வாறானதொரு நடவடிக்கையை ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் மேற்கொண்டிருக்கின்றது. அப்போது போல், இப்போதும் கண்டனங்கள் தாராளமாகவே முன்வைக்கப்படுகின்றன. அப்போது போல், இப்போதும் - இது நாடுகளின் இறைமையை மீறும் செயல் என்று ஐக்கிய நாடுகள் சபை கண்டித்திருக்கின்றது. ட்ரம்ப் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், முதலில் நடவடிக்கை பின்னர் நிலைமையை ஒழுங்கமைத்தல் என்னும் அடிப்படையிலேயே விடயங்களை கையாள முற்படுகின்றது. ஏனெனில் இவ்வாறான விடயங்கள் சிறிது காலத்திற்கு மட்டும்தான் பரப்பரப்பாக பேசப்படும், பின்னர் புதிய அரசியல் கொந்தளிப்புக்களால் காணாமல் போய்விடும். பனாமாவின் மீதான படையெடுப்பு, ஈராக் விவகாரம் தொடர்பில் இப்போது பேசப்படுகின்றதா - இல்லைதானே! வெனிசுலாவின் மீதான இராணுவ நடவடிக்கையானது, புஸ் நிர்வாகத்தின் பனாமா நடவடிக்கையை நினைவூட்டினாலும் கூட, சில வேறுபாடுகளும் உண்டுதான் ஆனால் சில அடிப்படையான ஒற்றுமைகள் உண்டு.

மதுராவை ஆட்சியிலிருந்து வெளியேறுமாறு ட்ரம்ப் தொடர்ந்தும் வலியுறுத்திவந்தார். அவரது முதலாது ஆட்சிக்காலத்திலும் வெனிசுலா மீதான இராணுவ நடவடிக்கையை ஆலோசித்தார். தேர்தலில் தோல்வியுற்றதைத் தொடர்ந்து ட்ரம்ப் நிர்வாகத்தின் நகர்வுகள் தடைப்பட்டது. ஆனால் பொருளாதாரத் தடைகள், உள்ளக ரீதியான ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகள் பலனளிக்காத போது அடுத்து என்ன செய்வது என்னும் கேள்விக்கான பதில் எப்போதும் ஒன்றே ஒன்றுதான் - அது இராணுவ நடவடிக்கை.

பனாமா விடயத்திலும் கூட அப்போதைய ரீகன் நிர்வாகம், இராஜதந்திர வழிகளில் சர்வாதிகாரி நொரியேகாவை அகற்றுவதற்கு முயற்சித்தது. அப்போது துணை ஜனாதிபதியாக இருந்த புஸ் அதனை கடுமையாக ஆட்சேபித்திருந்திருந்தார். 1989இல் இடம்பெற்ற தேர்தலில் வழமைபோல் மோசடிகளை செய்து, தேர்தலில் வெற்றிபெற்றவர்களை அச்சுறுத்தி, தனது பாடசாலைத் தோழன் ஒருவரை ஜனாதிபதியாக அறிவித்தார். இந்தப் பின்புலத்தில், பலப் பிரயோகம் ஒன்றே அமெரிக்காவிற்கான தெரிவாக இருந்தது. வெனிசுலா விடயத்திலும் இதுதான் நடந்திருக்கின்றது.

1999இல், சோசலிச அடையாளத்தை முன்னிறுத்திய ஹூவா ஜவோஸ் தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, வெனிசுலாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு நெருக்கடிமிக்கதாக மாறியது. ஜாவோஸ் அமெரிக்க எதிர்ப்பை தனது பிரதான அரசியலாக முன்னெடுத்தார். அமெரிக்காவின் எதிரி நாடான ஈரானுடனும், போட்டியாளரான சீனா மற்றும் ரஸ்யாவுடனும் நெருக்கத்தை பலப்படுதினார். கியூபாவுடன் இணைந்து, அமெரிக்க எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு பரந்த கூட்டணி ஒன்றை ஏற்படுத்த முயற்சித்தார். இந்தப் பின்னணியில்தான், 2002இல், அமெரிக்க ஆதரவுடன் ஜாவோஸை அகற்றும் சதிப் புரட்சியொன்று இடம்பெற்றது. அது தோல்வியடைந்தது. 2013இல் ஜாவோஸ் இறந்ததைத் தொடர்ந்து, நிலைமை இன்னும் மோசமடைந்தது. எவ்வாறு பனாமாவில் தேர்தல் மோசடிகளைச் செய்து ஆட்சி தக்கவைக்கப்பட்டதோ, அவ்வாறானதொரு வழியிலேயே மதுரோவும் நடைபோட்டார். 2018இல் இடம்பெற்ற தேர்தலில் மோசடி வழிகளின் மூலம் தனது அதிகாரத்தை தக்கவைத்தார். இதனைத் தொடர்ந்து அப்போதைய ட்ரம்ப் நிர்வாகம் மதுரோவின் ஆட்சியின் மீது அதியுச்ச அழுத்தங்களை பிரயோகித்தது. மதுரோ ஆட்சியிலிருந்து வெளியேறி ஜனநாயகத்திற்கு இடமளிக்க வேண்டும் என்று ட்ரம்ப் நிர்வாகம் வலியுறுத்தியது.

2024இலும், மதுரோ தேர்தலில் தோல்வியடைந்தார் ஆனால் மோசடி வழிகளை பிரயோகித்து அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டார். அப்போதைய ஜனாதிபதி பைடன் நிர்வாகம் எதிரணியில் வெற்றி பெற்ற எட்முண்டோ கோன்சாலஸையே உத்தியோக பூர்வமான ஜனாதிபதியாக அறிவித்தது. 2024 நொவம்பரில் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியானதைத் தொடர்ந்து வெனிசுலா விவகாரம் தொடர்பான நிலுவை விடயங்கள் மீளவும் வெள்ளை மாளிகையின் முதன்மை விடயமானது. மிகவும் மோசமான போதை வஸ்த்து பயங்கரவாதியாக மதுரோ அறிவிக்கப்பட்டார். மதுரோவின் தலைக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விலை விதிக்கப்பட்டது. ராஜதந்திர வழிமுறைகளில் மதுரோவை அகற்றும் அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில், ஒக்டோபர் 2025இல், ட்ரம்ப் வெனிசுலாவுக்குள், சிஐஏ இரகசிய நடவைடிக்கைளில் ஈடுபடுவதற்கான உத்தரவை வழங்கினார். சீனாவை ரஸ்யாவை வைத்து கடுமையாக நடந்து கொள்ளலாம் என்று எண்ணாமல் மதுரோ உடன் பதவி விலக வேண்டும் என்று டிசம்பர் மாதத்திலும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார். நடவடிக்கை இடம்பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரும் கூட, தனிப்பட்ட தொலை பேசி உரையாடலில், மதுரோவை பதவியிலிருந்து வெளியேறுமாறு ட்ரம்ப் அறிவுறுத்தியதாக, அமெரிக்க ஊடகமொன்று குறிப்பிடுகின்றது. ராஜதந்திர அணுகுமுறைகள், பொருளாதாரத் தடைகள் அனைத்தும் பலனளிக்காத பின்னணியிலேயே வோசிங்கடன் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் பனாமாவின் மீதான இராணுவ நடவடிக்கைக்கும் வெனிசுலாவின் மீதான இராணுவ நடவடிக்கைக்கும் இடையில் அதிக ஒற்றுமையுண்டு.

இவ்வாறான வரலாற்றுத் நகர்வுகள் மிகவும் அரிதாகவே இடம்பெறுவதுண்டு. அமெரிக்கா ஏன் இவ்வாறானதொரு நகர்வை மேற்கொண்டது? வெனிசுலாவின் பிரமாண்டமான எண்ணெய் வளமே இதற்கான காரணம் என்பதே பலரது பதிலாக இருக்கின்றது. ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. இது அமெரிக்க செல்வாக்கிற்குட்பட்ட மேற்கு அரைக் கோளப் பிராந்தியம் (Western Hemisphere). இங்குள்ள வளங்களை எங்களுடைய எதிரிகளும் போட்டியாளர்களும் கொண்டு செல்ல முடியாது. அமெரிக்க ராஜாங்கச் செயலர் மைக்கல் ரூபியோவின் வார்த்தையில், “எண்ணெய் அல்ல பிரச்சினை ஆனால் அது அமெரிக்காவின் எதிரிகள் போட்டியாளரை நோக்கிச் செல்வதுதான் பிரச்சினை”. அதே வேளை, அமெரிக்க துணை ஜனாதிபதி, இது எங்களுடைய செல்வாக்கு வளையமாகும், சீனா, ஈரான் ரஸ்யா வெளியில் செல்ல வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் வெனிசுலாவின் மீதான வோசிங்டனின் இராணுவ நடவடிக்கை, மேற்கு அரைக்கோளத்தின் மீதான அமெரிக்காவின் பழைய பனிப்போர்கால அணுகுமுறைக்கு திரும்பும் போக்கிற்கான சான்றாகும். நீண்டகாலமாக இந்தக் கொள்கையிலிருந்து அமெரிக்க நிர்வாகம் எட்ட நின்றது. இனி அவ்வாறு எட்ட நிற்க முடியாது. அந்தக் காலம் முடிந்துவிட்டது. எங்களுடைய பிராந்தியத்திற்குள் உங்களுக்கு வேலையில்லை, வெளியில் செல்லுங்கள் என்பதே ட்ரம்ப் நிர்வாகத்தின் அறைகூவலாகும்.


2015 டிசம்பரில் வெளியிடப்பட்ட அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு மூலோபாய அறிக்கையில் இந்த விடயம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. அதனடிப்படையில் அமெரிக்கா மீண்டும் மன்றோ கோட்பாட்டுக்கு திரும்புகின்றது. ஜனாதிபதி ட்ரம்ப் இதனை, “டோன்ரோ கோட்பாடு (Donroe Doctrine)” என்று வரையறுக்கின்றார். மேற்கு அரைக் கோளம் என்பது அமெரிக்காவின் செல்வாக்கிற்குட்பட்ட பிராந்தியம் என்னுமடிப்படையில், ஐரோப்பிய அதிகாரங்கள் இங்கு செல்வாக்குச் செலுத்த முடியாது என்னும் கொள்கை நிலைப்பாடுதான், (Monroe Doctrine) மன்றோ கோட்பாடாகும். அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் மன்ரோ 1823இல் இதனை அறிமுகம் செய்தார். 1904இல், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் - தங்களின் பிராந்தியத்தில் சர்வதேச பொலிஸ்காரராக தொழிற்படும் உரிமை அமெரிக்காவிற்குண்டு என்று அறிவித்தார். இந்தப் பிராந்தியத்தில் தீய விடயங்கள் இடம்பெறுமானால், லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது தலையீடு செய்யும் உரிமை அமெரிக்காவுக்கு உண்டு என்னுமடிப்படையில் மன்றோ கோட்பாட்டை விரிவுபடுத்தினார்.


இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ட்ரம்ப் நிர்வாகமானது, முன்னைய சர்வதேச பொலிஸ் நிலைப்பாட்டுக்கு திரும்பியிருக்கின்றது என்னும் அறைகூவலே வெனிசுலாவின் மீதான இராணுவ நடவடிக்கையாகும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வுத் தாகத்துக்கு 'நோ லிமிட்'







நிலாந்தன்

**கடந்த 16 ஆண்டுகளாகதமிழ்க் கட்சிகள் வாக்களிப்பு அலைகளைக் கூட உற்பத்திசெய்ய முடித்தவைகளாக மெலிந்து வருகின்றன. தமிழ்க் கட்சிகள் அலைகளுக்காகக் காத்திருக்கபோகின்றனவா? அல்லது பொருத்தமான தருணங்களில் அலைகளை உற்பத்திசெய்யப் போகின்றனவா? அல்லது அலைகள் ஓய்வதில்லை என்று கூறி பழைய பெருமைகளை இரைமீட்டுக் கொண்டிருக்கப் போகின்றனவா?**




புத்தாண்டுபிறந்த பின் நடந்தமுதலாவதுபோராட்டம் தையிட்டியில் நடந்தது. அது நடந்த அதேநாளில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் "நோ லிமிட்" பெருமெடுப்பில் திறக்கப்பட்டது. தையிட்டிக்குவந்த ஜனத்தையும் நோ லிமிட்டுக்குவந்த ஜனத்தையும் ஒப்பிட்டு சமூக வலைத்தளங்களில் பரவலாககுறிப்புகள் வெளிவந்தன. போராட்டத்துக்குப் போனமக்களைவிடவும் நோ லிமிட்டுக்குப் போனமக்கள்தான் அதிகம். ஆனால் அதுதான் சமூகயதார்த்தம். உலகயதார்த்தம்.

மகாஜனங்கள் எப்பொழுதும் நுகர்வுத் தாகத்தோடு இருப்பார்கள். இப்போதுள்ள சமூகவலைத்தளச் சூழலில், காணொளி யுகத்தில், காசுகொடுத்துச் செய்யப்படும் விளம்பரங்கள் மக்களின் பசியை, தாகத்தை, விடுப்புணர்வை மேலும் அதிகப்படுத்தும். அந்த டிஜிட்டல் விளம்பரங்களால் ஆட்கொள்ளப் பட்டுஅங்கேஎன்ன இருக்கிறது என்று பார்க்கமக்கள் வருவார்கள்.

பெருவணிகநிறுவனங்கள் திட்டமிட்டு சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் நுகர்வு அலையை, நுகர்வுப் பசியை உற்பத்திசெய்யும். அந்த அலைக்குள் அள்ளுபட்டு மக்கள் வருவார்கள். யாழ்ப்பாணத்தின் உயர்தர உணவுவிடுதிகளுக்கு இரவுகளில் சென்றால் தெரியும். அங்கு குடும்பமாகவந்து சாப்பிடுவது புலம் பெயர்ந்த தமிழர்கள் மட்டும் அல்ல அவர்களைவிட அதிகதொகையில் உள்ளூர் மக்கள் வருவார்கள். உயர்தர உணவகங்களில் சாப்பிடுவது என்பது ஒரு பொதுப்போக்கு. ஒருவிடுப்பார்வம். ஒருவிதஎடுப்பு. சமூகத்தில் அதிகமாக உழைக்கும் அனேகரை அங்கேகாண முடியும்.

ஆனால் எல்லாஅலைகளைப் போலவே இந்த அலையும் ஒருநாள் தணிந்துவிடும். ஹீல்ஸ், நதியாஸ், நோ லிமிட் போன்றவற்றுக்கு எப்பொழுதும் மக்கள் வெள்ளம் அலைமோதுவதில்லை. பண்டிகைநாட்களைத் தவிர.

அதுபோலவே பேர்க்கர் கிங், காலித் பிரியாணி போன்ற உயர்தர உணவகங்களில் எல்லா ஆசனங்களும் என்றென்றும் நிரம்பி இருப்பதில்லை. டிஜிட்டல் ப்ரோமோஷன் மூலம் துண்டப்பட்ட, உற்பத்தி செய்யப்பட்டஎந்த ஓர் அலையும் நிரந்தரமானது அல்ல. அலைகள் நிரந்தரமானவை அல்ல.

மனிதர்கள் அரசியல் விலங்குகள் மட்டுமல்ல,இலத்திரனியல் வலைக்குள் சிக்கிய இரண்டுகால் பூச்சிகளுந்தான். அரசியலுக்கும் அப்பால் அவர்களுக்கென்று தெரிவுகள், ஈடுபாடுகள், பசி, தாகம் இருக்கும். போர்க் காலங்களில் சமூகம் மூடப்பட்டிருக்கும்போது தெரிவுகள் குறையும். நெருக்கடிகள் அதிகமாக இருக்கும். அப்பொழுது ஒருமக்கள் கூட்டத்தை அரசியல் பயப்படுத்துவது இலகுவானது. போர், அடக்குமுறை போன்றன ஒரு சமூகத்தை உணர்வுபூர்வமாக நொதிக்கவைக்கும்போது அங்கேமக்களை அரசியலில் உணர்திறன் அதிகமுடையவர்களாக இருப்பதுண்டு.

**அலைகளை உற்பத்தி செய்வதற்கு அதற்குரிய ஒரு அரசியல், சமூகப் பொருளாதாரக் காரணிகள் இருக்கவேண்டும். கூட்டு உளவியல் இருக்கவேண்டும். தென்னிலங்கையில் ஏற்பட்ட ராஜபக்சங்களுக்கு எதிரான வெறுப்பு அலையை, தேசியமக்கள் சக்தி அனுர அலையாக மாற்றியது.**

கடல் அமைதியாக இருக்கும்போது மீன் அதிகம் படாது. கடல் கொந்தளிக்கும் நாட்களில் மீன் அலைக்குத் தப்பி வலைக்குள் விழும். எனவே ஒரு மக்கள் கூட்டத்தைத் திரட்டுவதற்கு, நொதிக்க வைப்பதற்கு ஒரு கூட்டு உளவியல் சூழல் இருக்கவேண்டும். அது இல்லையென்றால் அல்லது ஏற்கனவே உள்ளகாரணங்களை உணர்வுபூர்வமானவைகளாக மாற்றமுடியவில்லை என்றால் அரசியல் விலங்குகள் திட்டமிட்டு உருவாக்கப்படும் வணிகநுகர்வுஅலைகளால் அடித்துச் செல்லப்பட்டும்.

தையிட்டி ஓர் உதாரணம். அங்கே போராடவேண்டியதேவை இருக்கிறது. போராடும்போதுஅதைத் தடுப்பதற்கு போலீஸ் வருகிறது. அதாவதுபோராட்டம் தீவிரம் அடைந்தால் ஒடுக்குமுறை அதிகரிக்கும். ஒடுக்குமுறை அதிகரித்தால் அதற்குஎதிரான போராட்ட உணர்வும் தூண்டப்படும். இது ஒருசமன்பாடு. தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த கவிஞர் மு.பொன்னம்பலத்தின் கவிதை ஒன்று உண்டு. "அதிகாரம் புரியாதசமன்பாடு" என்ற அந்தக் கவிதையில்.

"சர்வாதிகாரம் என்பது விடுதலையை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு,

தன்னைஅறியாமலேஅதைப் பிறப்பிக்க

யோனிவாயிலில் காத்திருக்கும் மருத்துவச்சி" என்றும், அதுஅதிகாரம் புரியாத ஒருசமன்பாடு என்றும் மு.பொ கூறுவார்.


பொருளாதார நெருக்கடி சிங்கள மக்களை வீதிக்குக் கொண்டுவந்தது. காலிமுகத்திடலில் கிராமம் அமைத்துப் போராடவைத்தது. ராஜபக்ஸக்களுக்கு வாக்களித்தமக்கள் 21 மாதங்களில் அவர்களைவிரட்டினார்கள். பொருளாதாரநெருக்கடியின் விளைவுகளைப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி அனுரஅலையைஉற்பத்திசெய்தது, வெற்றியும் பெற்றது.

எனவே அலைகளை உற்பத்தி செய்வதற்கு அதற்குரிய ஒருஅரசியல், சமூகப் பொருளாதாரக் காரணிகள் இருக்கவேண்டும். கூட்டுஉளவியல் இருக்கவேண்டும். தென்னிலங்கையில் ஏற்பட்ட ராஜபக்சங்களுக்கு எதிரான வெறுப்பு அலையை, தேசியமக்கள் சக்தி அனுர அலையாக மாற்றியது. கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் வாக்களிப்பு அலைகளைக் கூட உற்பத்தி செய்ய முடித்தவைகளாக மெலிந்து வருகின்றன. தமிழ்க் கட்சிகள் அலைகளுக்காகக் காத்திருக்கபோ கின்றனவா? அல்லது பொருத்தமானதருணங்களில் அலைகளை உற்பத்தி செய்யப் போகின்றனவா? அல்லது அலைகள் ஓய்வதில்லைஎன்று கூறி பழைய பெருமைகளை இரைமீட்டுக் கொண்டிருக்கப் போகின்றனவா? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமர், ஹனுமான் படங்களுடன் வைக்கப்பட்ட பதாகை: மன்னாரில் சர்ச்சை ஆனது ஏன்?

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையின் மன்னார் தீவையும், இந்தியாவின் ராமேஸ்வரத்தையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ள மணல் திட்டுக்களை ராமாயணத்துடன் தொடர்பு படுத்துவது குறித்து இலங்கையில் சர்ச்சை எழுந்துள்ளது.

இலங்கையின் மன்னார் தீவுக்கும் இந்தியாவின் ராமேஸ்வரம் தீவுக்கும் இடையில் உள்ள கடல் பகுதியில் தொடர்ச்சியாக மணல் திட்டுகள் உள்ளன. இதனை இந்துக்களில் ஒரு தரப்பினர் ராமர் பாலம் என அழைக்கின்றனர். ஆதாமின் பாலம் எனவும் சிலர் இதனை குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில், இலங்கையின் சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் இயங்கும் சுற்றுலா அதிகார சபையினால் மன்னார் தீவின் நுழைவாயில் பகுதியில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையொன்றில் இந்து கடவுள்களின் உருவப் படங்கள் காட்சிப் படுத்தப்பட்டதை அடுத்தே இந்த சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த அறிவிப்புப் பலகையில் ராமர், ஹனுமான் ஆகியோரின் உருவப் படங்கள் இடம்பெற்றுள்ளன. சுற்றுலா அதிகார சபையின் வட மாகாண அலுவலகத்தினால் இந்த அறிவிப்புப் பலகை சமீபத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்தப் பகுதி வரலாற்று முக்கியத்துவமும் சூழல் முக்கியத்துவமும் கொண்ட இடமாகக் கருதப்படுகிறது.

ராவணன் சீதையை இலங்கைக்குக் கடத்தி வந்ததன் பின்னர், இலங்கைக்கு வந்த சீதையை மீட்பதற்காக ராமர் தலைமையிலான படையினர் செல்வதற்காக அனுமன் ஒரு பாலத்தை அமைத்ததாக ராமாயணம் கூறுகிறது. இந்த மணல் திட்டுக்களே அந்தப் பாலம் என இந்துக்களில் ஒரு தரப்பினர் கருதுகின்றனர்.

ஆனால், இதனை ஆதாமின் பாலம் என்றே சில தரப்பினர் தொடர்ந்து குறிப்பிட்டு வருகின்றனர்.

ஆனால், இந்த அறிவிப்புப் பலகை, இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு வைக்கப்பட்டுள்ளது என்றும் இதனை அந்த இடத்திலிருந்து அகற்ற வேண்டும் என்றும் மன்னாரைச் சேர்ந்த கிறிஸ்தவ மத குருமார்கள் கோரியுள்ளனர்.

இந்து சமயக் கடவுள்களின் படங்களைத் தாங்கியுள்ள இந்த பெயர்ப் பலகை மன்னாரின் மத நல்லிணக்கத்தைப் பாதிக்கிறது என மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் மன்னார் மறைக் கோட்ட முதல்வர் பி.கிறிஸ்துநாயகம் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர சபைக்கு பி. கிறிஸ்துநாயகம் எழுதியுள்ள கடிதத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார். இது மதங்களுக்கு இடையிலான ஒற்றுமையைச் சீர்குலைத்து குழப்பத்தையும் தோற்றுவிப்பதாக உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


இந்தப் பெயர்ப் பலகை தொடர்பாக பொதுமக்கள் தமது அதிருப்தியையும் எதிர்ப்பையும் தினமும் தமக்குத் தெரிவித்து வருவதாகவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே மன்னாரிலுள்ள அனைத்து மத மக்களின் நன்மையையும் கருதி, இந்த பெயர் பலகையை இந்த இடத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பி. கிறிஸ்துநாயகம் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

'அகற்ற கூடாது' ஆனால், மன்னார் நகர நுழைவாயிலில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள இந்த அறிவிப்புப் பலகையை அகற்றக்கூடாது என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர், "ராமருக்கும் மன்னாருக்கும் தொடர்பு இருக்கிறது. அவர்கள் வந்திறங்கியது மன்னார் தீவில்தான். திரும்பி போனதும் மன்னார் தீவிலிருந்துதான். இது தொடர்பான இலக்கிய பதிவுகள் இருக்கின்றன. இலக்கிய பதிவுகளின்படி, ராமர் மன்னார் தீவில் வந்திறங்கினார். பின்னர் சீதையையும் கூட்டிக்கொண்டு ராமேஸ்வரம் போனார். தமிழர்களை சமய அடிப்படையில் பிளவுபடுத்துகிற வேலையை இப்போது மன்னார் கத்தோலிக்கர்கள் செய்துக்கொண்டிருக்கின்றார்கள்" என்று தெரிவித்தார்.

### கடிதம் எழுதியவர் என்ன சொல்கிறார்?

க.சச்சிதானந்தனின் கருத்து குறித்தும் கடிதம் எழுதப்பட்டமைக்கான காரணம் குறித்தும் பி.கிறிஸ்துநாயகத்திடம் கேட்டபோது, "மன்னார் நகரத்திற்குள் வருகின்ற நுழைவாயிலில் இருக்கின்ற படியினால், அது சில வேளைகளில் மற்ற மதத்தவர்களை புண்படுத்தலாம். அதனால், அந்த இடத்திலிருந்து எடுங்கள் என்று மாத்திரமே சொல்லப்பட்டிருக்கின்றது. அதை வேறு இடத்தில் வைக்கலாம். அதில் எந்தவொரு பிரச்னையும் இல்லை. தலைமன்னாரில் வைக்கலாம் அல்லது வேறு எங்கேயும் வைக்கலாம். நுழைவாயில் என்ற படியால் மாத்திரமே இந்த கடிதம் எழுதப்பட்டது. அதைவிடுத்து, ஏனைய மதங்களை புண்படுத்தும் வகையிலான நோக்கம் என்னிடம் இருக்கவில்லை." என்று தெரிவித்தார்.



### அரசாங்கம் என்ன சொல்கின்றது?

மன்னார் நகர் நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள படம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னை குறித்து, சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்கவை தொடர்புக் கொண்டு வினவியது.

மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை பாதுகாக்கும் வகையில் இந்த பிரச்னை தொடர்பில் தாம் தலையீடு செய்து பிரச்னையை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

"சமூகத்தில் இவ்வாறு சர்ச்சைகளை எழுப்பும் சம்பவங்கள் நிகழும் பட்சத்தில், அந்த குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்த தயாராகவுள்ளோம். சமயத் தலைவர்கள், சமூகத்திலுள்ள முக்கியஸ்தர்கள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடல்களை நடத்தி சிறந்ததொரு தீர்வை எடுக்க வேண்டும். உரிய குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி, அனைத்து மதங்களையும் பாதுகாக்கும் விதத்தில் இந்த பிரச்னையை தீர்த்து வைக்க நாங்கள் தலையீடு செய்வோம்" என பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறான பிரச்னைகள் தொடர்ச்சியாக வரும் சந்தர்ப்பத்தில் சுற்றலாத்துறைக்கு பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதா என கேட்டபோது, 'அப்படியான பிரச்னைகளுக்கு வாய்ப்பில்லை' என்றார் ருவன் ரணசிங்க.


"நாங்கள் மிகுந்த தெளிவான சிந்தனையுடன் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி வருகின்றோம். இந்திய சுற்றுலா பயணிகளுக்கு இதனூடாக எந்தவித பிரச்னையும் ஏற்படாது. யாழ்ப்பாணம், மன்னார், நுவரெலியாவின் சீதை அம்மன் கோவில், ராவணனின் இடங்கள் ஆகிய இடங்களுக்கு இந்திய சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்கின்றார்கள். அதில் எந்தவித பிரச்னையும் இல்லை" என ருவன் ரணசிங்க தெரிவிக்கின்றார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலோங்கும் அமெரிக்க ராணுவ வல்லாண்மை:

ஐங்கரன் விக்கினேஸ்வரா



## வெனிசுலா, ஈரான், கிரீன்லாந்து தொடர் நெருக்கடி!

வெனிசுலா விவகாரத்தின் பின்னர் ஈரானுக்கு இஸ்ரேலும், அமெரிக்காவும் விடுத்துள்ள எச்சரிக்கை தெஹ்ரான் அரசை பதற்றத்தில் ஆழ்த்தியுள்ளது. போராட்டம் தீவிரம் அடைந்தால், ஈரான் உச்ச தலைவர் ரஷ்யாவிற்கு தப்பியோட முயற்சிப்பார் என்ற தகவலை மேற்குலக ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

அதே நேரத்தில் மேலோங்கும் அமெரிக்க ராணுவ வல்லாண்மை தற்போது தீவிரம் பெற்று வருகிறது. இதன் விளைவாக வெனிசுலா, ஈரான், கிரீன்லாந்து நாடுகளில் தொடர் நெருக்கடி நிலவுகிறது.


### ஈரானில் ஆட்சி வீழுமா?

ஈரானியர்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் செய்வதை அமெரிக்க அரசு ஊக்குவித்து வருகிறது என்று ஈரான் குற்றஞ்சாட்டி உள்ளது. அதிகரித்து வரும் பணவீக்கம் ஈரான் மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்ந்துள்ளது. தலைநகர் தெஹ்ரானில் பொருளாதார தேக்கநிலையும் காணப்படுகிறது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ஈரான் நாணயத்தின் மதிப்பு 32,000 ரியாலாக கடந்த 2015 ஆண்டில் சரிந்தது. அது மென்மேலும் சரிந்து இப்போது 1.4 மில்லியன் என்ற மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் ரியால் மதிப்பு சரிவு 40 முதல் 45 சதவீதம் அதிகரித்துள்ளது.

போராட்டங்களை ஒடுக்க அரசு, பாதுகாப்பு படையினரை இறக்கி விட்டு உள்ளது. ஒருபுறம் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், வன்முறை, போராட்டத்தில் சிக்கி பலர் பலியாகி வருகின்றனர். இதுபற்றி உள்ளூர் அரசு ஊடகம் மற்றும் மனித உரிமை குழுக்கள் கூறும்போது, பலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் உள்ளனர் என தெரிவித்து உள்ளது.

ஈரானில் வலுக்கும் போராட்டங்களின் விளைவாக பரவிய வன்முறையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 36 பேர் வரை பலியாகி இருக்க கூடும் என கூறப்படுகிறது.




### வெனிசுலாவில் பொம்மை அரசு?

ஜனவரி மூன்றாம் நாள் அதிகாலையில் மின்னல் வேகத்தில் அமெரிக்க டெல்டா படைகள் நடாத்திய தாக்குதல் குறித்து பல சர்வதேச இராணுவ வல்லுனர்கள் வியப்பைத் தெரிவித்துள்ளனர். உலகை வியப்பில் ஆழ்த்திய வெனிசுலா தாக்குதலின் மறுபக்க உண்மைகள் என்னென்ன என்று தற்போது வெளியாகி உள்ளன. உளவுப் படைகள் மூலம் வெனிசுலாவிலே நடந்தது பேரம்பேசப்பட்ட விவகாரம் என்றும் சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் காரகஸில் அரசியல் மட்டுமன்றி, ஆகாயமும் அமைதியின்மையின்றியே இருந்தது. ஜனவரி 3, 2026 அதிகாலை, உலக வரலாற்றில் முக்கிய நாளாக எழுதப்பட்டது. அன்று காலை முதல் செய்தி வெளியான பின்னர் உலக அரசியலின் நீதி அமைப்பே உடைந்து போனதாக தென்பட்டது.

வரலாறு மீண்டும் திரும்பி உள்ளது. நேரமும் சூழலும்





ஈரானில் ஆட்சி மாற்றம் நிகழக்கூடிய சாத்தியம் உள்ளது. அதேவேளை வெனிசுலாவில் பொம்மை அரசை நிறுவ அமெரிக்க முயல்கிறது. கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால் இது டென்மார்க்கிற்கு எதிரான ஆக்கிரமிப்பாகவே கருதப்படும். இதற்கெல்லாம் மேலோங்கும் அமெரிக்க இராணுவ வல்லாண்மையே காரணமாகும்.

கூட அசாதாரணமாக உள்ள நிலையில் தான் பொருளாதார ஆக்கிரமிப்பில் ஓர் நாட்டின் இறையாண்மை அழிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா மீதான தாக்குதலும், அதிபர் மதூரோ நாடுகடத்தப்பட்டு கைதியாகி சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வும் இதனையே உணர்த்துகிறது.

இதே தினத்தில் ஜனவரி 3, 1990 பனாமா ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அதிபர் நோரியாகா கைதாகி அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டார். 36 ஆண்டுகள் இடைவெளியில் அதே திகதியில் இரு வேறு இலத்தீன் நாடுகளின் தலைமைத்துவம் அமெரிக்க அரசால் கைப்பற்றப்பட்டது. அதே இராணுவ ஆக்கிரமிப்பு நடைமுறை. அதே போதை பொருள் கடத்தல் என்ற காரணம்.

ஆனால் உண்மையான நோக்கம் வேறு. மூலவளங்கள் மற்றும் வர்த்தக நடைமுறைகள் மீது கட்டுப்பாட்டை பெறவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது வெளிப்படை.

எப்படி இருந்தாலும் வரலாற்றில் அமெரிக்கா வாழ்நாளெல்லாம் வலிமை இல்லாத நாடுகளை தாக்கி வருகிறது.

ஈராக், லிபியாவை தொடர்ந்து ஈரான் மீது போர் தொடுக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது.

முழுநேர போர், அதுவும் கொரில்லா யுத்தம் என்று வந்துவிட்டால் வியட்நாம் அனுபவத்தை அமெரிக்கா இன்னும் மறக்கவில்லை. தினமும் உடல்களுடன் அமெரிக்கா வந்த பிண பைகள், பொருளாதார செலவு எல்லாம் அமெரிக்காவுக்கு இன்னும் நிறைய நினைவில் இருக்கிறது.

இப்போது இருக்கும் உலகளாவிய மோசமான பொருளாதார நிலையில் அப்படி ஒரு நிலைவந்தால் அது எரிகிற தீயில் எண்ணெய் விட்டதாகும். இதனால் போரே இல்லாமல், பொம்மை அரசாங்கம் ஒன்றை நிறுவ அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்த திட்டம் மூலம் வெனிசுலாவை நோக்கி நகரும் சக்தி வாய்ந்த திட்டத்தை அமெரிக்க அரசு செயல்படுத்த முயல்கிறது.

### கிரீன்லாந்தை ஆக்கிரமிக்குமா?

கிரீன்லாந்தை அமெரிக்கா விரைவில் கைப்பற்றுமா என்பது குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் இந்த நடவடிக்கையை டென்மார்க்கிற்கு எதிரான ஆக்கிரமிப்பு என்றே கருத வேண்டிய அவசியம் உள்ளது.

கிரீன்லாந்தை ஆக்கிரமிக்க தயார் என்ற ட்ரம்பின் வாய்ச்சவாடல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அமெரிக்கா கிரீன்லாந்தை விரைவில் ஆக்கிரமிக்கக்கூடும் என்று அரசியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதே வேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கிரீன்லாந்தை தாக்கக்கூடும் என்ற சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்று சில நேட்டோ உறுப்பு நாடுகள் ஐயமுற்றுள்ளன.

வெனிசுலா மீதான அமெரிக்காவின் திடீர்த் தாக்குதலுக்குப் பின்னர் ட்ரம்பின் அடுத்த திட்டம் என்ன என்ற அச்சங்கள் கிறீன்லாந்தைச் சூழ்ந்துள்ளன. ஆர்க்டிக்கில் உள்ள ஒரு பரந்த தீவாகிய கிரீன்லாந்தைத் தனது கட்டுப்பாட்டில் எடுப்பதற்காக அமெரிக்கா படை பலத்தைப் பரிசீலிக்கக்கூடும் என்ற அச்சம் அதிகரித்து வருகின்றது. மேலும் கிரீன்லாந்திற்கு ஒரு சிறப்புத் தூதரை நியமிக்க ட்ரம்ப் நிர்வாகம் சமீபத்தில் எடுத்த நடவடிக்கை டென்மார்க்கில் கோபத்தைத் தூண்டியது.

### கொமேனிக்கு எதிராக போராட்டம்:

ஈரானில் பொருளாதார நெருக்கடிக்கு எதிரான போராட்டத்தோடு, ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயோதுல்லா அலி கொமேனிக்கு எதிராகவும் அதிருப்தி அலைகள் வலுத்துள்ளன. ஈரானின் 21 மாகாணங்கள் போராட்டத்தால் பற்றி எரிகின்றன. நாடெங்கும் கொமேனிக்கு சாவு, கொமேனிக்கு வெட்கம் போன்ற முழக்கங்கள் வலுத்துள்ளன. போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் ஈரானின் மிகவும் சக்திவாய்ந்த, அதிகாரமிக்க இராணுவ மற்றும் பாதுகாப்புப் படையான இஸ்லாமிய புரட்சிகர இராணுவப் படைகளையும் எதிர்க்க பொது மக்கள் துணிந்துவிட்டனர். இந்தப் படை ஈரானின் உயர் தலைவர் கொமேனியுடன் நேரடி தொடர்பு கொண்ட படை. இதற்கு முந்தைய போராட்டங்களில் இப்படை வந்தால் அமைதியாக இடத்தை காலி செய்யும் மக்கள் இந்த முறை அதைச் செய்யவில்லை. கொமேனியை அப்புறப்படுத்த வேண்டும் என்று ஓங்கி ஒலிக்கின்றனர்.



### அமெரிக்க எச்சரிக்கை:

வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதல் மற்றும் அதன் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி கைது செய்யப்பட்மை தொடர்பில் ஈரான் கவனம் செலுத்த வேண்டும் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது. ஈரான் தனது அணுசக்தி திட்டத்தால் உலகை அச்சுறுத்துவதாக இஸ்ரேல் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இஸ்ரேலும் ஈரானும் மோதலில் ஈடுபட்டிருந்தபோது, ஈரானிய அணுசக்தி இலக்குகளைத் தாக்கி அவற்றை அழிப்பதன் மூலம் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு உதவியது. இந்தத் தாக்குதல்கள் ஈரானின் அணுசக்தி திட்டத்தை பல ஆண்டுகளாக பின்னுக்குத் தள்ளியதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறினார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு தொடர்பாக ஈரானில் தற்போது போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பல்லாயிரக்கணக்கான ஈரானியர்கள் முக்கிய நகரங்களில் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். இந்த போராட்டக்காரர்களை ஒடுக்க ஈரானிய அரசாங்கம் முயற்சித்து வருகிறது. ஆனால் ஈரானியரய்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் செய்வதை அமெரிக்க அரசு ஊக்குவித்து வருகிறது என்று ஈரான் குற்றஞ்சாட்டி வருகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## வெனிசுலாவின்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

1933இல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பிராங்ளின் டி. ரூஸ்வெல்ட், "நல்ல அயலவர்கள்" என்னும் கோட்பாட்டை அறிமுகம் செய்தார். இதன் மூலம் லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்னும் நிலைப்பாட்டை முன்வைத்தார் ஆனால் அதன் பின்னர் உருவாகிய அமெரிக்க - சோவியத் பனிப்போர் அரசியலானது, இந்தக் நிலைப்பாட்டை அதிக காலத்திற்கு அனுமதிக்கவில்லை. சோவியத் செல்வாக்கிற்குள் லத்தீன் அமெரிக்க நாடுகள் வீழ்ந்துவிடும் என்னுமடிப்படையில்தான் லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க உளவுத்துறை நிழல் யுத்தங்களை நடத்தியது. பல ஆட்சியாளர்களை அப்புறப்படுத்தியது, அழித்தது, பல சதிப்புரட்சிகளுக்கு போசகர்களாக இருந்தது. இது பற்றி சிஐஏ வெளியிட்ட ஆவணங்களே இருக்கின்றன.

இங்கு பிரச்சினை ஒரு பெரிய நாடு நல்ல அயலவராக இருப்பதுடன் பிரச்சினை முடிந்துவிடுவதில்லை என்பதுதான். குறிப்பிட்ட பிராந்தியத்தில் இருக்கும் சிறிய நாடுகளும் பெரிய நாட்டிற்கு நல்ல அயலவராக இருக்க வேண்டியது கட்டாயமானது. அவ்வாறான நிலைமை இல்லாத போது அதிகாரத் தலையீடுகள் தவிர்க்க முடியாதவையாகும். அமெரிக்கா உலகில் இருக்கும் ஒரேயோரு மேலாதிக்க அதிகாரமாகும். எனவே அதன் நீண்டகால நலன்களின் அடிப்படையில் காலத்திற்கு காலம் இவ்வாறான தலையீடுகளை செய்ய வேண்டியது தவிர்க்க முடியாதது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இந்த அதிகாரத்திற்கான சதுரங்க ஆட்டம் வெனிசுலாவுடன் முடிந்துவிடாது. ஆனால் அமெரிக்காவின் நகர்வானது, முன்னைய பனிப்போர் கால பிராந்திய மேலாதிக்கத்திற்கான பச்சைக் கொடியாகவும் மாறலாம் என்பதுதான் விடயம். அன்றைய பனிப்போர் கால அரசியல் நிர்பந்தங்கள்தான், இந்திராகாந்தி நிர்வாகம் அயல்நாடுகளின் மீதான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது. வெனிசுலா விவகாரம், மீண்டும் பிராந்திய மேலாதிக்கத்திற்கான அவசியம் தொடர்பான உரையாடல்களை தூண்டலாம். ஏனெனில் இப்போது சோவியத் யூனியனின் இடத்தில் சீனா நோக்கப்படுகின்றது.

## மேலோங்கும் அமெரிக்க...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானில் நடைபெற்று வரும் போராட்டங்களின் போது போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டால் ஈரான் இழப்பீடு செலுத்த வேண்டியிருக்கும் என்றும், தாம் இந்த விடயத்தில் தலையிட வேண்டியிருக்கும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கும் தொனியில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமைதி வழியில் போராடும் மக்க ளுக்கு எதிராக ஈரான் வன்முறையை நிகழ்த்தினால், அமெரிக்கா தலையிடும். நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

ஈரானில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்தால் ஈரானிய உச்ச தலைவர் அயதுல்லா அலி கொமேனி ரஷ்யாவிற்கு தப்பிச் செல்லத் தயாராக இருப்பதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. ரஷ்யாவும் ஈரானும் நெருங்கிய நட்பைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ●

## புத்தாண்டில் சகல தரப்புகளையும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபை தேர்தல்களை எத்தகைய தேர்தல் முறை யின் கீழ் நடத்துவது என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கான பிரேரணை ஒன்று இவ்வாரம் பாராளு மன்றத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேபோன்றே தற்போது நடைமுறையில் உள்ள காணாமல் போனோர் விவகார அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் போன்றவையும் பயனுறுதியுடைய முறையில் செயற்படக்கூடியதாக வலுவூட்டப்பட்பட வேண்டும் என்கிற அதேவேளை, மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்கச் செயன்முறை ஒன்றும் நிறுவப்பட வேண்டும்.

நிறுவனங்களில் நம்பிக்கை வைப்பதற்கு அரசியலமைப்புச் செயன்முறைகளின் மீது மதிப்புவைக்க வேண்டியது அவசியம். சமூகத்தில் நம்பிக்கைவைப்பதற்கு சகல தரப்புகளையும் அரவணைத்து தீர்மானங்களை எடுக்கும் அணுகுமுறை அவசியம். சமூகங்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுவதற்கு மெய்யான அதிகாரப்பகிர்வும் பொறுப்புக் கூறலும் அவசியம். பொருளாதார மீட்சி, அனர்த்தப் பாதிப்புக்களில் இருந்து மீளவதற்கான புனர்நிரமாணம், நிறுவன ரீதியான நேர்மை மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் ஆகியவை தனித்தனியான பணிகள் அல்ல. அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த ஜனநாயக ஆட்சிமுறையின் செயற்பாடுகளாகும்.

அரசாங்கம் அதன் மைய ஆதரவாளர்கள் தளத்தில் நம்பிக்கைவைத்துச் செயற்படுவதற்கு அப்பால் நகர்ந்து பரந்தளவிலான அரசியல் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை சேர்த்துக் கொள்ளக்கூடிய முறையில் ஆட்சி செய்ய வேண்டும். அரசாங்கத்தின் வெற்றி அதன் சீர்திருத்தங்களின் நீடித்த நிலைப்பில் மாத்திரமல்ல, நாட்டின் நீண்டகால அடிப்படையிலான உறுதிப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்குமான வாய்ப்புக்களிலும் தங்கியிருக்கிறது. ●

## எண்ணமே...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வெண்ணங்கள் நம் குணமாக மாறும். மனதைக் கட்டுப்படுத்தும். எண்ணங்களை ஏற்றத்தின் பாதையாக்கும் போது வியத்தகு நற்பெயர் நம்மைத் தேடிவரும். ஆழ்மனதைக் கேட்கும்போதும், தட்டும்போதும், தேடும்போதும்தான் நற்குணம் வெளிப்படும். முன்னேற்றத்திற்கான பாதைகள் உதயமாகும். இடைவிடாத முயற்சி மூலம் நம் குணத்தை மாற்ற முடியும் சிறப்பானதாக்கவும் முடியும்.

பூக்கள் பூத்துக் குலுங்கும் தோட்டம் போன்றது மனது. அத்தோட்டத்தில் பூக்கும் பூக்களே எண்ணங்கள். சிறப்பாகத் திட்டமிட்டு உழைப்பது மூலம் நல்ல, அழகிய, பயன்தரக்கூடிய பூக்களை தோட்டத்தில் வளர்க்கலாம். கவனக்குறைவு காரணமாக தேவையற்ற முட்புதர்கள் தோன்றி நல்லெண்ணங்களை பாழ்படுத்த முடியும். கவனியாது விட்டுவிட்டால் பூக்கள் மறைந்து வறண்ட நிலமாகத் தோட்டம் மாறிவிடும். எனவே, மனதின் எண்ணங்களைத் தொடர்ந்து கண்காணித்தாக வேண்டும்.

எண்ணங்களும் குணங்களும் சூழலின் தாக்கத்தால் பாதிக்கப்படும். பல குணங்கள் நமக்கு இல்லை என்று தோன்றும். ஆனால் இக்கட்டான, இடர்கள் நிறைந்த, சவாலான சூழல்களில், எதிர்பாராதவிதத்தில் அக்குணங்கள் வெளிப்படும். ஆழ்மனதின் எண்ணங்கள் சூழ்நிலை ஏற்படும் போது குணமாக வெளிப்பட்டு விடும். வாழ்வில் வளர்ச்சியும் முன்னேற்றமும் தினம் தினம் ஏற்படுகிறது. இதனால் தினமும் மனதில் எழும் எண்ணங்கள் குறித்துக் கவனத்துடன் இருக்க வேண்டும்.

(தினமணி)

# குளிரூட்டி வசதியின்றி எடுத்து செல்லப்பட்ட யோக்கட்கள் உள்ளிட்டவை யாழில் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் குளிரூட்டி வசதியின்றி விநியோகத்திற்காக எடுத்து செல்லப்பட்ட யோக்கட் மற்றும் பால் பைக்கெற்றுக்ள் என்பவை நீதிமன்ற உத்தரவில் அழிக்கப்பட்டுள்ளன.

மூளாய் பகுதியில் அப்பகுதி சுகாதார பரிசோதகர் ஜெ.கோபிராஜ் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யோக்கட் மற்றும் பால் பைக்கெற் என்பவற்றை எடுத்துச் சென்ற வாகனத்தை வழிமறித்து சோதனைக்கு உட்படுத்தினர்.

அதன்போது, வாகனத்தில் குளிரூட்டி வேலை செய்த நிலையில் குறித்த வாகனத்தில் 613 யோக்கட்கள் மற்றும் 61 பால் பைக்கெற் என்பவற்றை விநியோகத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது. அதனை அடுத்து அவற்றை பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் மீட்டதுடன் யோக்கட் மற்றும் பால் பைக்கெற் என்பவற்றை கைப்பற்றியதுடன் அவற்றை விநியோகத்திற்காக எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் வாகனச் சாரதி மற்றும் விநியோக முகாமையாளர் ஆகியோருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டவேளை மன்றில் சாரதி மற்றும் விநியோக முகாமையாளர் ஆகியோர் முற்பட்ட நிலையில், அவர்கள் இருவரையும் தலா ஒரு இலட்ச ரூபாய் சரீர பிணையில் விடுவித்த மன்று, கைப்பற்றப்பட்ட யோக்கட் மற்றும் பால் பைக்கெற் என்பவற்றை அழிக்குமாறு உத்தரவிட்டது.

(அ)

## ஆபத்துக்குள்ளாகியிருக்கும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்கு பாரதூரமான எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலையும் தோற்றுவிக்காத வெனிசூலாவில் எதற்காக ஆட்சி மாற்றத்தை ட்ரம்ப் விரும்புகிறார்? அந்த நாடு பெரியளவில் போதைப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற ஒரு நாடு மல்ல. அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு மூன்று முக்கிய காரணங்களை சர்வதேச அரசியல் அவதானிகள் அடையாளம் காண்கிறார்கள்.

முதலாவதாக, உலகின் மேற்கு அரைக் கோளத்தில் அமெரிக்காவின் முதன்மையை மீண்டும் திணிப்பதற்கு ட்ரம்ப் விரும்புகிறார். அமெரிக்காவின் ஐந்தாவது ஜனாதிபதியான ஜேம்ஸ் மொன்றோ அமெரிக்க கண்டத்தின் நாடுகளில் எதிர்காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் தலையீடுகளைச் செய்யாமலும் காலனித்துவ ஆதிக்கத்தைச் செலுத்தாமலும் இருப்பதை உறுதிசெய்வதற்காக ஐரோப்பிய விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது என்று 1823 ஆம் ஆண்டில் உறுதியளித்து பிரகடனம் ஒன்றைச் செய்தார். அதுவே மொன்றோ கோட்பாடு (Monroe Doctrine) என்று அழைக்கப்பட்டது.

அந்த கோட்பாட்டின் வழியில் தற்போது அமெரிக்க நாடுகளை அமெரிக்காவின் செல்வாக்குப் பிராந்தியமாக வைத்திருப்பதில் ட்ரம்ப் நாட்டம் கொண்டிருக்கிறார். அண்மையில் அவரது நிருவாகத்தினால் வெளியிடப்பட்ட 'தேசிய பாதுகாப்பு கோட்பாடு' லத்தீன் அமெரிக்காவையும் கரிபியன் பிராந்தியத்தையும் மூலோபாய முன்னுரிமைக்குரியவையாக அடையாளம் காண்கிறது. இதற்கு அமெரிக்க ஊடகங்கள் ' டொன்றோ கோட்பாடு' என்று வேடிக்கையாக பெயர் சூட்டியிருக்கின்றன.

லத்தீன் அமெரிக்காவில் வெளிப்பிராந்தியத்தைச் சேர்ந்த வல்லரசுகளின் (பிதானமாக சீனா) செல்வாக்கை அல்லது கட்டுப்பாட்டை அமெரிக்கா நிராகரித்து அதன் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவச் செல்வாக்கின் கீழ் மேற்கு அரைக்கோளத்தை வைத்திருக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு கோட்பாட்டு ஆவணம் வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, அமெரிக்காவின் முதன்மைக்கு வலுவூட்டுகின்ற அதே வேளை, மேற்கு அரைக்கோளத்தில் சீனாவினதும் ரஷ்யாவினதும் செல்வாக்கை தடுக்கவும் ட்ரம்ப் நிருவாகம் விரும்புகிறது. சீனா ஏற்கெனவே அதன் மண்டலமும் பாதையும் செயற்திட்டத்தின் ஊடாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாரிய முதலீடுகளைச் செய்திருக்கிறது. பிராந்தியத்தின் பெரும்பாலான நாடுகளின் மிகப் பெரிய அல்லது இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகவும் சீனா விளங்குகிறது

மூன்றாவதாக, லத்தீன் அமெரிக்காவின் பெரும்பாலான நாடுகளில் ஆட்சியில் இருக்கும் இடதுசாரிப் போக்குடைய தலைவர்களுக்கு பதிலாக தீவிர வலதுசாரி களை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கும் அமெரிக்கா விரும்புகிறது. மதுரோவின் கைதுக்குப் பிறகு செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய ட்ரம்ப் ' மேற்கு அரைக் கோளத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கம் மீண்டும் ஒருபோதும் கேள்விக்கு உட்படுத்தப்படமாட்டாது' என்று கூறியது கவனிக்கத்தக்கது.

வெனிசூலா மீது மேற்கொண்ட தாக்குதல் மூலமாக அமெரிக்கா மற்றைய நாடுகளின் இறைமையையும் பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. அரசுகள் அவற்றின் நிலப்பரப்பு உரிமைக் கோரிக்கைகளுக்காகவோ அல்லது அரசியல் கோரிக்கைகளுக்காகவோ படைபலத்தைப் பிரயோகிக்கக்கூடாது என்று கடந்த நூற்றாண்டில் இரு உலகப்போர்களின் பயங்கரங்களுக்கு பிறகு இணங்கிக்கொள்ளப்பட்ட சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டை அமெரிக்கத் தாக்குதல் வலுவிழக்கச் செய்திருக்க்கிறது என்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்காக உலகிடம் இருக்கும் ஒரேயொரு பொறிமுறையான ஐக்கிய நாடுகளை அமெரிக்காவின் நடவடிக்கை மோசமாகப் பலவீனப்படுத்தியிருக்கிறது என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க் கவலை தெரிவித்திருக்கிறார். சட்டத்தின் ஆட்சிக்காக சர்வதேச சமூகம் துணிச்சலுடன் குரல்கொடுக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

வெனிசூலாவையடுத்து ட்ரம்ப் கொலம்பியா, கிறீன்லாந்து, மெக்சிக்கோ, கியூபா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளையும் அச்சுறுத்துகிறார்.

மதுரோ அரசாங்கத்தைக் கண்டனம் செய்வதில் முன்னர் காட்டியதைப் போன்ற உத்வேகத்தை அந்த நாட்டின் இறைமையை மீறிய ட்ரம்பின் ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்வதில் ஐரோப்பிய நாடுகள் காண்பிக்கவில்லை.

இலாபத்துக்காகவும் அரசியல் மேலாதிக்கத்துக்காகவும் அமெரிக்காவின் வல்லமையை தொடர்ந்தும் பயன்படுத்துவதில் ட்ரம்ப் உறுதியாக இருக்கிறார் என்பதை அவரின் நியூயோர்க் ரைம்ஸ் நேர்காணல் பிகாசமாக அம்பலப்படுத்துகிறது.

சர்வதேச சட்டங்களுக்கும் நியமங்களுக்கும் கட்டுப்பட்டுச் செயற்படவேண்டும் என்று தான் உணரவில்லை என்று கூறிய அவரிடம் அமெரிக்க இராணுவ வல்லமையைப் பயன்படுத்துவதுவதற்கான ஆற்றலில் ஏதாவது மட்டுப்பாடுகள் இருக்குமா என்று கேட்கப்பட்டபோது தனது சொந்த மனத்தினால் மாத்திரமே அதை நிறுத்த முடியும் என்று பதிலளித்தார்.

சர்வதேச சட்டம் தனக்கு தேவையில்லை என்றும் இரண்டாவது உலகப் போருக்கு பின்னரான காலப்பகுதியில் அமெரிக்காவின் உதவியுடன் நிறுவப்பட்ட உலக ஒழுங்கு இன்று அநாவசியமான ஒரு சுமையாக இருக்கிறது என்றும் ட்ரம்ப் கூறிய வார்த்தைகள் உலகம் வரும் நாட்களில் எதிர் நோக்கப்போகும் ஆபத்துக்கு கட்டியம் கூறுகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்ட...

தொடர்பாடல், மின்சாரம் மற்றும் நீர் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மீட்டெடுத்து மீண்டும் கட்டியெழுப்பும் திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக இரவும் பகலும் உழைத்த அரச அதிகாரிகளின் பங்களிப்பை பாராட்டுவதாகவும், அந்த அனர்த்தத்தை எதிர்கொள்வதில் அரச பொறிமுறை நாட்டிற்கும் மக்களுக்கும் அதன் அர்ப்பணிப்பை நிரூபித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைய காலங்களில் ஏற்பட்ட மிகப் பாரிய பேரழிவுகளில் ஒன்றை நாங்கள் சந்தித்தோம். நாடு விரைவாக மீள முடியாது என்று பலர் கூறினர். ஆனால் இப்போது அனர்த்தத்தால் சேதமடைந்த அனைத்து வீதிகளையும் மீண்டும் திறந்துள்ளோம். தொடர்பாடல், மின்சாரம், நீர் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

அதற்காக நமது அரசியல்வாதிகள், குறிப்பாக அரச அதிகாரிகள், கடுமையாக உழைத்தனர். இந்த நாட்டு மக்களுக்கு நமது அரச பொறிமுறை பற்றி நல்ல புரிதல் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த அனர்த்தத்தின் போது, நமது அரச அதிகாரிகள் நாட்டிற்கும் மக்களுக்கும் எவ்வளவு அரப்பணிபபுடன் செயற்படுகிறார்கள் என்பதை நிரூபித்தனர். பல அதிகாரிகள் இரவும் பகலும் உழைத்தனர். மக்களும் அதற்காக முன்வந்தனர். அந்த அர்ப்பணிப்பின் விளைவாக, நாங்கள் கணிசமான அளவிற்கு மீண்டு வந்துள்ளோம்.

ஆனால் இந்தப் பேரழிவு நமது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். நமது நாட்டின் பொருளாதாரம் இதற்கு முன்பு ஒரு பாரிய நெருக்கடியைச் சந்தித்தது என்பதை இங்குள்ள நாம் அனைவரும் அறிவோம். அந்த நெருக்கடியின் விளைவுகளை நாம் அனைவரும் எதிர்கொண்டோம். மின்சாரம், எரிபொருள், எரிவாயு, பால் மா போன்றவை கிடைக்கவில்லை. முழு நாடும் வீழ்ச்சியடைந்தது. அத்தகைய பொருளாதார நெருக்கடி இயற்கை பேரழிவால் உருவாகவில்லை.

மேலும் இதுபோன்ற பொருளாதார வீழ்ச்சி கிராமங்களில் வசிக்கும் நமது தாய்மார்கள் மற்றும் தந்தையர்களின் தவறுகளினால் ஏற்பட்டது அல்ல. ஆட்சியில் இருந்த அரசியல்வாதிகளிடம் பரவலாக காணப்பட்ட ஊழல், இலஞ்சம், முறைகேடு மற்றும் தவறான முடிவெடுகளை எடுத்தல் போன்றவற்றால் நமது நாட்டு மக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொண்டனர்.

அதைத் தொடர்ந்து நடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில், நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் எங்களை ஆட்சிக்கு தேர்ந்தெடுத்தனர். மக்களுக்கு பல எதிர்பார்ப்புகள் இருந்தன. மோசடி மற்றும் ஊழலற்ற அரசாங்கம், ஊழல்வாதிகளையும்

மோசடிக்காரர்களையும் தண்டித்தல், சட்டத்தின் ஆட்சியை நிறுவுதல் மற்றும் இளைஞர்களை போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்றுதல் அந்த இலக்குகளில் முக்கியமானவை ஆகும்.

அனைவரும் வாழ்வதற்கு போதுமான வருமான ஆதாரத்தை உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே முக்கிய காரணியாக அமையும். அந்த இலக்கை நோக்கி நாம் ஏற்கனவே குறிப்பிடத்தக்க அளவு பணிகளைச் செய்து முடித்துள்ளோம்.

அப்படிப்பட்ட ஒரு நேரத்தில்தான் நாம் இப்படி ஒரு பேரழிவை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், அந்தப் பேரழிவை எதிர்கொண்ட மக்களின் வாழ்க்கையை முன்பை விட சிறப்பாக மீண்டும் கட்டியெழுப்ப நமக்கு வலிமை இருக்கிறது. அதற்காக இந்த ஆண்டு 50,000 கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளோம். பொருளாதாரத்தை வலுப்படுத்தினால் மட்டுமே அந்த வலிமை வரும்.

நமது கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை இதை விட சிறப்பாக இருக்க வேண்டும். சரியாக உணவு உண்ணாதவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். தலைமுறை தலைமுறையாக நல்ல வீடு இல்லாதவர்கள் இருக்கிறார்கள். நம் நாட்டு மக்கள் இப்படி வாழக்கூடாது. 70-80 ஆண்டுகால வாழ்க்கையில் எல்லோரும் மனிதனாக வாழக்கூடிய ஒரு நாட்டை நாம் உருவாக்க வேண்டும்.

எனவே, இந்தப் பொருளாதாரத்தையும் மக்களைக் கவனித்துக் கொள்ளும் ஒரு நாட்டையும் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் மிகவும் திட்டமிட்ட முறையிலும் முறையாகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். நாம் அதைச் செய்ய வேண்டும். நாம் அதைச் செய்யாவிட்டால், யாரும் அதைச் செய்ய மாட்டார்கள். கடந்த 76 ஆண்டுகளில் அதைச் செய்திருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த நாட்டில் மக்களைக் கவனித்துக் கொள்ளும் ஒரு அரசாங்கம் இருந்தால், அது இந்த அரசாங்கம்தான். அதனால்தான் பேரழிவை எதிர்கொண்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப 50,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டன. இவ்வளவு பாரிய தொகை இதற்கு முன்பு ஒதுக்கப்பட்டதில்லை-என்றார். (அ)

## வடக்கில்...

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இது இன்று (நேற்று) முற்பகல் 11.40 மணியளவில் முல்லைத்தீவுக்கும் சுண்டிக்குளத்திற்கும் இடையில் சாலை ஊடாக நிலப்பகுதிக்குள் நுழைந்து தற்போது இரணைமடுக் குளப்பகுதியை மையம் கொண்டுள்ளது.

இந்த சாலைப் பகுதி புவியியல் ரீதியாகவும் காலநிலையியல் ரீதியாகவும் கூர்ந்து அவதானிக்க வேண்டிய பகுதி. அண்மித்த காலங்களில் குறிப்பாக கடந்த 2000ஆம் ஆண்டு முதல் வங்காள விரிகுடாவில் உருவாகிய பல காற்றுச் சுழற்சிகள் இந்த பகுதியினூடகவே வட மாகாணத்தினுள் பிரவேசித்துள்ளன.

இது இன்று (நேற்று) மாலை அல்லது இரவு வலைப்பாட்டுக்கும் அந்தோனியார்புரத்துக்கும் இடையில் மீண்டும் கடற்பகுதிக்குள் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மிதமான மழை இன்று காலை வரை தொடரும் வாய்ப்புள்ளது. மிதமான மழை கிடைத்தாலும் தொடர்ச்சியாக மழை கிடைத்து வருகின்றது. இது ஒரு சில தாழ்நிலப் பகுதிகளில் நீர் தேங்க காரணமாக அமையக் கூடும். வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் தொடர்ந் தும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் உள்நிலப்பகுதிகளில் காற்றின் வேகம் சற்று அதிகமாக காணப்படும். அதே வேளை நன்கமைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மீண்டும் கடற்பகுதிக்குள் செல்லும் போது கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு கரையோரங்களில் காற்றின் வேகம் மணிக்கு 40-50 கி.மீ. வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது-என்றுள்ளது. (அ)

## ஒரோ...

தொடர்பாடல் திட்டத்தின் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், ஆரம்பக் குழந்தைப் பருவ வளர்ச்சி ஒரு குழந்தையின் எதிர்காலத்திலும் நாட்டின் நீண்டகால மனித வள மேம்பாட்டிலும் தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனக் கூறினார்.

ஆரம்பக் குழந்தைப் பருவ வளர்ச்சி பெற்றோரின் மட்டும்தான் பொறுப்பு எனக் கருதப்படக் கூடாது. அது சமூகத்தின் ஒருங்கிணைந்த பொறுப்பாக பார்க்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், கல்வித் துறையின் ஒரு சிறப்பு பிரிவாக ஆரம்பக் குழந்தைப் பருவ வளர்ச்சியை அங்கீகரித்து, யுனிசெப் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பக் குழந்தைப் பருவ வளர்ச்சி தொடர்பான கல்விக் கொள்கை ஒன்றை உருவாக்கியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். (அ)

## 22 நாடுகளிடம்...

வளாகத்தில் சேமிக்கப்பட்டு, அவற்றின் விரைவான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான விநியோகத்தை உறுதி செய்ய வெளிநாட்டு நிவாரண உதவி ஒருங்கிணைப்புக்கான உயர்மட்டக் குழு மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாடுகள், வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகள் அனுப்பிய நிவாரணப் பொருட்களை, நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின் படி இலங்கை சுங்கத்திலிருந்து விடுவித்து, மிக விரைவாக பாதிக்கப்பட்ட மக்களிடம் கொண்டு சேர்ப்பதே எங்கள் நோக்கம். மேலும், அனைத்து பொருட்களும் சரியான கணக்குப்பதிவுடன், முறையான போக்குவரத்துடன், எந்தவித வீணாக்கமும் இன்றி உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான பொருட்கள் குறித்து வெளிநாட்டு தூதரகங்களுக்கு முன்னதாகவே தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நாடுகள் தேவையான உதவிகளை அனுப்பி வருகின்றன-என்றார். (அ)

## தீவிரமடையும்...

கண்ணங்கர தெரிவித்துள்ளார்.

இதன்படி ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான 9 நாட்களில் மாத்திரம் நாடு முழுவதும் 2,420 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதில் மேல் மாகாணத்தில் அதிகபட்சமாக 1,317 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும் தென் மாகாணத்தில் 361 டெங்கு நோயாளர்களும், மத்திய மாகாணத்தில் 192 நோயாளர்களும் பதிவாகியுள்ளதுடன் சப்ரகமுவ மாகாணத்தில் 165 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய அதிகபடியான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதன்படி கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 165 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 393 நோயாளிகளும், களுத்துறை மாவட்டத்தில் 128 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர். கூடுதலாக, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கணிசமான எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதன்படி, காலி மாவட்டத்தில் 148 டெங்கு நோயாளிகளும், மாத்தறை மாவட்டத்தில் 162 டெங்கு நோயாளிகளும் பதிவாகியுள்ளனர். இதே நேரத்தில், கண்டி மாவட்டத்தில் 140 நோயாளிக ளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 113 நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் கவனம் செலுத்த வேண்டிய அளவில் டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதால், குறித்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் வலியுறுத்தியுள்ளனர். (அ)

## 100 அடி...

வெளிநாட்டு குழந்தை நேற்று பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பத்தின்போது , குழந்தை செல்பி எடுக்க முயன்றபோது கிட்டத்தட்ட 100 அடி உயரத்தில் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

சம்பவத்தைத் தொடர்ந்து, "பறக்கும் ராவணன் சாகச பூங்கா மீட்பு குழு" சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, சவாலான நிலப்பரப்பின் மத்தியில் குழந்தையை வெற்றிகரமாக பாதுகாப்பாக மீட்டனர்.

மீட்புக்குப் பிறகு, குழந்தையின் தாய் மிகுந்த உணர்ச்சியுடன் மகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதற்காக நிம்மதி அடைந்தார். உயரமான சுற்றுலாத் தலங்களில், குறிப்பாக பாறை ஓரங்களுக்கு அருகில் புகைப்படம் எடுக்கும்போது அல்லது செல்பி எடுக்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அதிகாரிகள் பார்வையாளர்களை வலியுறுத்தியுள்ளனர். (அ)

## நான்கில்...

சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் மாற்றத்தக்க பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைத்தல் 2025 முதல் 2030 எனும் அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வறுமைப் பகுப்பாய்வு நிலையம் மற்றும் ஓ.டி.ஐ. குளோபல் நிறுவனத்தின் அனுசரணையில் சுயாதீனக் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் மாற்றத்தக்க பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைத்தல் எனும் அறிக்கை கொழும்பு மன்றக் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், இலங்கையின் நெருக்கடிக்குப் பின்னரான மீட்சிக்கான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் மற்றும் வறுமையைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் கொள்கைக் கட்டமைப்பு, இந்த அறிக்கையின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் உறுதியான பொருளாதார நிலையை உருவாக்க இதுவரை முடியவில்லை என்று, இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநர் இவெட் பெர்னாண்டோ கூறியுள்ளார். எனவே, அரசாங்கம் தலையிட்டு தனியார்த் துறையையும் இணைத்துக்கொண்டு ஒரு தேசியத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## அரியாலையில்...

இருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த அரியாலையை சேர்ந்த 23 வயதுடைய நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். விபத்து தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

குறித்த பாதுகாப்பற்ற ரயில் கடவையால் கடந்த காலங்களில் உயிரிழப்பு சம்பவங்கள் பதிவானதாகவும், உரிய பாதுகாப்பு கடவை அமைக்கக் கோரி மக்கள் பலமுறை போராட்டம் செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (அ-05)

## சுற்றுலாப்...

வீதத்தால் அதிகரித்துள்ள போதிலும், அதற்கேற்ப மொத்த வருமானம் அதிகரிக்கவில்லை எனவும், வருமானம் வெறும் 1.6 வீதத்தாலேயே உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சுற்றுலாப் பயணி இலங்கையில் செலவிடும் சராசரித் தொகை கடந்த ஆண்டை விட சுமார் 181 அமெரிக்க டொலர்களால் குறைவடைந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் காலப்பகுதி குறைவடைந்தமை அல்லது சிக்கனமாகச் செலவு செய்யும் நாடுகளிலிருந்து அதிகப்படியான பயணிகள் வருகை தந்தமை இதற்கு காரணமாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. (அ)

## பேராற்றில்...

தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக தாழ்நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

அந்தவகையில் பேராற்றுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளமையால் அதன் 3 வான் கதவுகளில் ஒரு வான் கதவு 1 அடி உயரத்துக்கு திறக்கப்பட்டுள்ளது. இதனால் நீர் செல்லும் பகுதியிலும், பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## டித்வா...

உறுதிப்படுத்தப்பட்டது.

சவூதி பிரதிநிதி குழுவில் மூத்த நிபுணர் மொஹம்மத் அல்-மதூத், மூத்த கடன் நிபுணர் அப்துல்ரஹ்மான் எம். அல்-சொகெயர், மற்றும் திட்ட பகுப்பாய்வாளர் பைசல் அல்-முலித் ஆகியோர் இடம்பெற்றனர்.

அமைச்சின் செயலாளர் டாக்டர் கபில பேரேராவும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகள், டித்வா ஏற்படுத்திய பாதிப்புகள் மற்றும் அதற்கெதிரான அரசின் நடவடிக்கைகள் குறித்து பிரதிநிதி குழுவுக்கு விளக்கமளித்தார்.

நாட்டின் அரசியல் நிலைத்தன்மை மற்றும் சமீபத்திய பொருளாதார மீட்பு நிலை குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதுவரை சவூதி அபிவிருத்தி நிதியம் இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# சுண்டிக்குளம், மாத்தளன் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறல்!

## கரையை அண்மித்து அச்சமின்றி மீன்பிடி


முல்லைத்தீவு, ஜன. 11

வடக்கு கடற்பரப்பான சுண்டிக்குளம், மாத்தளன் கடற்பரப்புகளில் தற்போது இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள கடற்பரப்புகளில் நிலவிவரும் சீரற்ற காலநிலையாலும், கடல் கொந்தளிப்பாலும் மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுவதை தவிர்த்துள்ளனர்.

இதனை சாதகமாக பயன்படுத்திய இந்திய மீனவர்கள் சுண்டிக்குளம், மாத்தளன் கடற்பரப்பில் கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அச்சமின்றி இழுவை மடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு கடலில் தற்போது



இறால் சீசன் என்பதால் அதனை அறிந்து கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை அவர்கள் அழித்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சுண்டிக்குளம் மற்றும் சாலை பகுதியில் இலங்கைக் கடற்படையின் மிகப்பெரிய கடற்படைத் தளங்கள் அமைந்திருக்கின்றபோதிலும் கடற்படைத் தளத்துக்கு அண்மையாக வந்து இந்திய இழுவைப் படகுகள் எந்தவித பயமுமின்றி தொழிலில் ஈடுபட்டுள்ளன.

இதனால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. அவர்களின் நீண்டகால கோரிக்கைக்கு இதுவரை எந்த ஒரு அரசும் நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கவில்லையென மீனவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். (அ)

## கொள்ளளவை எட்டியது இரணைமடு!


கிளிநொச்சி, ஜன. 11

கிளிநொச்சி மாவட்டத்தின் மழையுடனான கால நிலை நிலவி வருகின்றது.

மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகிய இரணைமடுக்குளம் அதன் முழுகொள்ளவை அடைந்துள்ளது.

மாவட்டத்தின் ஏனைய குளங்களான கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம் என்பன வான்பாய்கின்றன.

கிளிநொச்சியூடாக வட்டக்கச்சி செல்லும் வீதியின் விவசாய பண்ணைக்கு அருகில் பனை மரம் மின்சார வயரில் வீழ்ந்து காணப்படுகின்றது. அதனை அகற்றும் பணியில் மின்சார சபையினர் ஈடுபட்டனர். (அ)



# ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான அவதூறு பிரசாரத்தை ஏற்கமுடியாது

### கஜேந்திரகுமார் கடும் கண்டனம்

கொழும்பு, ஜன. 11

கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக தற்போது அவருக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளவேமுடியாத அவதூறு பிரசாரங்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது முகநூல் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

பிரதமர் என்கிற ரீதியிலும் அவரது கட்சியின் ஒரு முக்கியஸ்தர் என்ற வகையிலும் கல்வி அமைச்சர் என்கிற ரீதியிலும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுடன் எமது அமைப்புக்கும் எனக்கும் மிக முக்கியமான தீர்க்கமான கொள்கை முரண்கள் இருக்கின்றபோதிலும் 6ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பில் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளவேமுடியாத அவதூறு பிரசாரங்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை - என்றுள்ளது. (அ)

## குறிகாட்டுவான் - நெடுந்தீவு படகு சேவை நேற்று மூன்றாவது நாளாகவும் நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜன. 11

காலநிலை சீரின்மை காரணமாக குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையிலான படகு போக்குவரத்து சேவைகள் நேற்று சனிக்கிழமை மூன்றாவது நாளாகவும் இடம்பெறவில்லை.

காலநிலை சீரின்மை காரணமாக கடற்கொந்தளிப்பு அதிகமாக உள்ளது. இதன் காரணமாக குறித்த படகு போக்குவரத்து சேவையை செயற்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

காலநிலையை கருத்தில் கொண்டே இன்று சேவை தொடர்பில் முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வாகன விபத்தில் 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 10



யாழ்ப்பாணம் நகர் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஆறு பேர் காயமடைந்தனர்.

கஸ்தூரியார் வீதி மற்றும் பெரிய கடை வீதி இணையும் சந்தியில் ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின.

ஹயஸ் வாகனத்தில் பயணித்த நான்கு பேரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பேரும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கச்சத்தீவு செல்வதற்கான ஏற்பாடுகள் மாவட்ட ஆட்சித் தலைவருடன் சந்திப்பு

சென்னை, ஜன. 11

யாழ்ப்பாணம் - கச்சத்தீவு திருவிழாவுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக தமிழ்நாடு - இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரை, வேர்கோடு பங்குத் தந்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் கச்சத்தீவு பங்குத்தந்தை அனுப்பிய கடிதத்துடன் வேர்கோடு பங்குத் தந்தை தோமஸ் பரிபாலன் தலைமையில் விழா ஒருங்கிணைப்புக் குழுவினர் நேற்று முன் தினம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜித் சிங் காலோனை நேரில் சந்தித்து விழாவுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர். (அ)

## கொழும்பில் உணவகம் ஒன்றின் உரிமையாளர் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜன. 11

தெஹிவளை மரைன் டிரைவ் பகுதியில், பாதாள குழுக்களுக்கிடையிலான மோதலின் பின்னணியில், உணவகம் ஒன்றின் உரிமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 55 வயதுடைய ஏ.டி. சனத் பாலசூரிய ஆராச்சி என்ற "சனா மாமா" என்ற பெயரில் அறியப்பட்டவர்.

அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் படுகாயமடைந்த நிலையில், களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைச் சம்பவம், "சுவா சமந்தா" மற்றும் "படோவிட்ட அசங்க" என்ற போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றக் குழுக்களுக்கிடையிலான போட்டியின் விளைவாக இருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## சட்டவிரோத மணல் அகழ்வு; 4 வாகனங்கள் கைப்பற்றல்

யாழ்ப்பாணம், ஜன. 11

சாவகச்சேரி தனங்களப்பு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு வாகனங்கள் கைப்பற்றப்பட்டதோடு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனங்களப்பு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சாவகச்சேரி பொலிஸார் விரைந்தனர்.

இதன்போது இரு டிப்பர் வாகனங்கள், இரு உழவு இயந்திரங்கள், மண் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் ஆகியவற்றை கைப்பற்றிய பொலிஸார் இருவரை கைது செய்தனர்.

கைதானவர்களையும், சான்றுப் பொருட்களையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

## மன்னார் கரையோரத்தில் நேற்று உட்புகுந்த கடல் நீர்



மன்னார், ஜன. 11

தற்போது நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோரப் பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்துள்ளது.

எனினும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. குறிப்பாக பள்ளிமுனை, பனங்கட்டுக்கொட்டு, எமில் நகர் உள்ளிட்ட கடற்கரையோரப் பகுதிகளில் இவ்வாறு கடல் நீர் உள் வாங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மறு அறிவித்தல் வரை கடல் தொழிலுக்குச் செல்லவில்லை. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.